பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 06 | ஞாயிற்றுக்கிழமை | 21.05.2023 | கதிர் 192

### வடக்கு - கிழக்கில் அமைந்துள்ள

# பௌத்த வரலாற்று அடையாளங்களை மறுசீரமைப்பதை உறுதிப்படுத்துங்கள்

### ஜனாதிபதியிடம் அஸ்கிரிய மகாநாயக்கர் நேரில் கோரிக்கை

வடக்கு,கிழக்கில் உள்ள விகாரைகள் மற்றும் நாடாளவிய ரீதியில் உள்ள விகாரைகள் மற்றும் பௌத்த வரலாற்று அடையாளங்களை மறுசீரமைப்பதை உறுதி செய்யுமாறு அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் கோரியுள்ளார்.

2



## இது ரகசியம் அல்ல!

அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தரப் பகைவனும் இல்லை என்று சொல்வார்கள். அரசியலுமேகூட நிரந்தரமில்லை. சாத்தியமானதைச் சாத்தியமாக்குவதுதான் அரசியல்கலை என்றும் சொல்லப்படுகின்றது. கொழும்பு ஆட்சியாளர்களிடம் இருந்து தமிழ் அரசில்வாதிகள் கேட்டவைகள் கிடைக்காதபோதெல்லாம் தமிழ் அரசுக் கட்சியின் உயர் தலைமைகள் இந்தக் கூற்றை அடிக்கடி உச்சரிப்பார்கள். பின்னர் மக்களை உரிமை என்று உசுப்பேற்றுவார்கள் என்பது வேறு கதை, ஆனால் அரசியலில் எதுவும் நிரந்தரமில்லை என்பதே உண்மை.

14 ஆண்டுகளுக்கு முன்னர் யாராவது இன்றைய ராஜபக்சக்களின் நிலை குறித்துக் கற்பனையாவது செய்து பார்த்திருக்க முடியுமா? மலடி பிள்ளை, முயற் கொம்பு போன்று ராஜபக்சக்களை இலங்கையின் ஆட்சிபீடத்திலிருந்து அகற்றுவதென்பது நடக்கவே முடி யாதது என்று இந்த உலகம் நம்பியது. அதற் குச் சற்று முன்னர் [illegible]

2

## சஜித்தை கோமாளி என விமர்சித்த ஐ.தே.கட்சி

எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைக் கோமாளி என்று வர்ணித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார, அத்தகைய கோமாளியை விரைவில் இழந்துவிடக்கூடாது என்றும தெரிவித்துள்ளார்.

ஆனமடுவவல் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துவெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியை முதலில் உடைத்துக்கொண்டு வெளியேறி பிறிதொரு அரசியல் கட்சியை தோற்றுவித்ததில் முதல் நபர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.

2

## நல்லைக் கந்தன் காளஞ்சி கையளிப்பு



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா ஓகஸ்ட் 21 கொடியேற்றத்துடன் தொடங்கித் தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ள நிலையில், திருவிழாவின்போது ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்திசெய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ் மாநகரசபையினருக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி சனிக்கிழமை காளஞ்சி கையளிக்கப்பட்டது. பெருவிழா நாட்காட்டியும்

2

## இன மோதலை உருவாக்க தற்போது மதவாதத்தைத் தூக்கியுள்ளார்கள்

### ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து

இனங்களுக்கு இடையில் மோதல்களை உருவாக்குவதற்காக மதவாதம் கையிலெடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பெலவத்தவில் உள்ள கட்சித் தலைமையகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போர் நிறைவுக்கு வந்



தவுடன் இலங்கைப் பிரஜைகளுக்கு ஆட்சியாளர்கள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டது. அவர்கள் வீதிக்கு இறங்கி பாற்சோறு தயாரித்து உண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்தமைக்கான காரணம், இந்த நாட்டின் எதிர்காலத்தினை சுபீட்சமாக்குவதற்காக இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்ப வேண்டும், பொருளாதாரத்தினையும் மேம்படுத்த வேண்டும் என்ற பெரும் எதிர்பார்பிலாகும். ஆனால் அந்த விடயங்கள் முன்னெடுக்கப்படவில்லை. மாறாக நல்லிணக்கம் சீர்குலைக்கப்பட்டது.

பொருளாதாரம் பாதாளத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. போர் நிறைவுக்கு வந்த கடந்த 14 ஆண்டுகளில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை ஸ்தாபிபப்பதற்கு

2

## முப்பொரும் தமிழ் விழா இன்று யாழ். நகரத்தில்

யாழ்ப்பாணப் பெட்டகம் நிழலுருக் கலைக்கூடம் உலக பண்பாட்டுத் தினத்தினை முன்னிட்டு

முப்பெருந் தமிழ் விழாவை இன்று நடத்தவுள்ளது. இதற்கென இந்தியாவில் இருந்தும் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இந்த முப்பெருந் தமிழ் விழா இடம்பெறவுள்ளது.

தலைமை அதிதியாக யாழ்ப்பாண மாவட்டச்செயலாளர் அ.சிவபாலசுந்தரன், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க.சுபாஷினி ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா. தமிழ் மரபு அறக்கட்டளை

2

## கடவைக் காவலாளி தொடருந்து மோதிச் சாவு

திருகோணமலையில் தொடருந்துக் கடவைகாவலாளி தொடருந்துடன் மோதுண்டு உயிரிழந்தார்.

சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் இந்த விபத்து தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தொடருந்துக் கடவையில் இடம்பெற்றது.

வீபத்தில்உயிரிழந்தவர் பீ.ஏ.றனசிங்க (63 வயது) என்பவராவார். இவர் ஜெயபுர கிராமத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை பிரீமா ஆலையிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த தொடருந்து பத்தினிபுறத்தில் உள்ள கடவையை அண்மித்தபோது காவலாளி உறங்கிக் கொண்டிருந்துள்ளார் என்றும் தொடருந்து மிக அருகில் வந்துவிட்ட நிலையில் அதன் சத்தத்தால் விழித்துக்கொண்ட அவர் அவசரமாகக் கதவை மூடச் செல்ல எத்தனிக்கையில் தொடருந்துடன் மோதுண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் தம்பலகாமம் தொடர்ந்து நிலையத்திற்கு கொண்டு சென்று தொடர்ந்துத் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அங்கிருந்து திருகோணமலை பொது வைத்திய சாலைக்குக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## விவசாய நவீனமயப்படுத்தலுக்காக தனியானதொரு செயலர் அலுவலகம்

### உடன் ஆரம்பிக்க ஜனாதிபத பணிப்பு

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகளை காண்பதற்காக விவசாயநவீனமயப்படுத்தல்செயலாளர் அலுவலகமொன்றை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகளுக்கான கொள்கைகளைத் தயாரிப்பது தொடர்பில் சனிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதன்போது, விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டதுடன் இணைந்து செயற்படும் ஜனாதிபதி செயலகம், விவசாய அமைச்சு உட்பட ஏனைய அமைச்சுக்களின் மேலதிகச் செயலாளர்கள் மற்றும் அவர்களுக்கு இணையான தரங்களில் இருக்கின்ற அதிகாரிகளை மேற்படி அலுவலகத்திற்காகப் பெயரிடுமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவுறுத்தியதோடு இந்த வேலைத்திட்டத்திற்கு தனியார்துறையின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், முப்படையினரையும் உள்வாங்கி மேற்படி நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார்.

தேயிலை, தெங்கு, இறப்பர், நெல், கறுவா, மீன்பிடி போன்ற துறைகளில் துறைசார் ஆய்வுச் செயற்பாடுகளை அரச மற்றும் தனியார் துறைகள் இணைந்து மேற்கொண்டு விவசாயநவீனமயப்படுத்தல் செயலகத்தின் வேலைத் திட்டங்களை வெளிப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதன்போது அரச நிறுவனங் களின் வழிகாட்டல்களின் கீழ் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து உள்ளூராட்சி சபை அதிகாரிகளினதும் பங்கேற்புடன் முன்னோடிச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான இயலுமை குறித்தும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விவசாய நவீனமயப்படுத்தல்

2

## கண்டி ஆயர் - ஜனாதிபதி நேற்று சந்திப்பு பெருந்தோட்ட மக்கள் குறித்துக் கவனம்





ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க கண்டியில் உள்ள ஆயர் இல்லத்திற்குச் சென்று கண்டி மறைமாவட்ட ஆயர் கலாநிதி வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையைச் சந்தித்தார்.

வீட்டுப் பிரச்சினை உட்பட, பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

2

## தந்தங்களுக்காக யானையை சுட்டுக் கொன்ற படுபாதகம்

### மின்னேரியக் காட்டில் சம்பவம்

மின்னேரியா, மே 21

மின்னேரிய தேசிய பூங்கா மற்றும் ரித்திகல காட்டுப் பகுதியில் சுற்றித் திரிந்த கோலித என்ற நீண்ட தந்தமுள்ள யானை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக ரித்திகல வனவிலங்கு தள அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதி மக்கள் ரித்திகல வனவிலங்கு அலுவலகத்திற்கு வழங்கிய தகவலுக்கு அமைய, வனவிலங்கு அதிகாரிகள் கோலிதாவின் சடலத்தைக் கண்டெடுத்தனர்.

சம்பவம் தொடர்பில் ரித்திகல வனவிலங்கு பாதுகாப்பு அலுவலகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது. இந்த யானை சுற்றுலா பயணிகளை கவரும் ஒன்றாக மாறி இருந்ததாகவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

15 வயதுடைய இந்த யானைக்கு சுமார் 2 அடி நீள முள்ள நன்கு வளர்ந்த இரண்டு தந்தங்கள் இருந்தன எனவும், உயிரிழந்த யானையிலிருந்து அவை அகற்றப்பட்டுள்ளன எனவும் அதிகாரிகள் தெரிவித் தனர், தந்தங்களைக் கொள்ளையிடுவதற்காகவே யானை கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஜப்பான் நாட்டின் நிதி உதவிகளுடன் தேரவாத பௌத்த பல்கலைக்கழகம்

### உருவாக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

தேரவாத பௌத்தம் தொடர்பிலான கற்கைச் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக மகா விகாரை பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நிறுவ எதிர்பார்த்திருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானுக்கான பயணத்தின்போது அதற்கான உதவிகளைபெற்றுக்கொள்ள



எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சனிக்கிழமை காலை கண்டி மல்வத்து பீடத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டதன் பின்னர். அவருடன் கலந்துரையாடினார். அதனையடுத்து அஸ்கிரிய மகா விகாரைக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் அஸ்கிரிய பீட மகா நாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞான ரதன தேரரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அத்துடன், பீடாதிபதிகளுடனான ஆசீர்வாத நிகழ்வின்போது, தேரவாத பௌத்தம்

2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடுதலைப் புலிகள் இயக்கத்தையும்அடியோடுஅழித்து விட முடியாது என்று உலகம் நம்பியது. ஆனால், எல்லாமே தலைகீழாகிவிட்டது.

வரலாற்றில் முப்படைகளையும் கொண்டிருந்த ஒரு விடுதலைப் போராட்ட இயக்கம்போரில் முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டது. அந்தப்போர்வெற்றியின்கதாநாயகர்களாக ராஜபக்ஷக்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த விம்பம் பிரமாண்டமானதாக இருந்தது. இலங்கையின் எதிர்காலத்தில் அவர்களின் இருப்பிடம் இனியொருபோதும் அசைக்க முடியாததுஎன்றமாயைதோற்றம் பெற்றது. வரலாற்றில் அடுத்த துட்டகாமினி என்று போற்றப்பட்டார்கள். மகாவம்சத்தின் நவீன அத்தியாயமாகக்கூட ராஜபக்ஷக்களின் போர் வெற்றி பொறிக்கப்படவேண்டும்என்கிற அளவிற்கு, அந்த வெற்றி வெறி மிகுந்திருந்தது.

போர் வெற்றி தமக்கு மட்டுமேயான சொத்து என்று அபகரித்துக்கொள்ள போர் வெற்றித் தளபதியான சரத் பொன்சேகாவோடு அவர்கள் பகிரங்கமாக மோதினார்கள். அவரைச் சிறையில் தள்ளி ஒன்றுமில்லாதவர்களாக்கினார்கள். போரை வென்று, போரை வென்ற தளபதியை வென்று ராஜபக்ஷக்கள் வெற்றியின் சிகரத்தில் இருந்தபோது அவர்களை அண்ணாந்து பார்ப்பதே முடியாத காரியம் என்று நினைத்ததுண்டு. ஆனால், இந்தப் 14 ஆண்டுகளில் முதல் தடவையாக அந்தப்போர்வெற்றிஉரிமையாளர்கள் போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவில்லை.

இந்த ஆண்டு போர் வெற்றிக் கொண்டாட்டம் மே 19 பத்திரமுல்லயில் உள்ள ரணவிரு வளாகத்தில் நடந்தது. அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தலைமை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசஉள்ளிட்டஅரசியல் தலைவர்கள், இந்நாள் முந்நாள் படைத்துறைத் தளபதிகள் என ஏராளமானோர் அந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டார்கள். ஆனால் அந்தக் கூட்டத்தில் போரை வென்ற அரசுத் தலைவரும் முப்படைகளின் தளபதியுமான மகிந்த ராஜபக்ஷ, போரை வென்ற பாதுகாப்புச் செயலரும் பின்னர் விரட்டியடிக்கப்பட்ட அரசுத் தலைவருமான கோட்டாபய ராஜபக்ஷ, இறுதிப் போரின்போதுபதில்பாதுகாப்பு அமைச்சராக இருந்தவரான மைத்திரிபால சிறிசேனவோ இருக்கவில்லை.

இவர்கள் அனைவரும் நிகழ்வுக்குஅழைக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டார்களா அல்லது அவர்களாகவே புறக் கணித்தார்களா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனால், கடந்த 13 வருடங்களாகத் தவறாமல் - அது அவர்களின் ஆட்சியாக இருந்தாலென்ன வேறு கட்சி ஆட்சியாக இருந்தாலென்ன - இந்த வெற்றிக் கொண்டாட்டதத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள்இவர்கள் எல்லோரும். ஆனால் இந்த 14ஆவது ஆண்டில் அவர்கள் போர்வெற்றிக்களத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்கள்.

போரை வென்ற ராஜபக்ஷக்களையே வென்ற அரசுத் தலைவராக ரணில் விக்கிரமசிங்கஇன்றுநிமிர்ந்து நிற்கின்றார். சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்கிறார். போர் வெற்றிக் களத்திலிருந்து ராஜபக்ஷக்களை முற்றிலும் அகற்றும் வகையில் அது அமைந்திருக்கின்றது. இதுதான் காலம். இதுதான் அரசியல்.

- இடிமின்னல் -

## பௌத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்துமூலமான ஆவணமொன்றைச் சமர்ப்பித்த அஸ்கிரியபீட மகாநாயக்கர்வரகாகொட ஸ்ரீஞானரத்ன தேரர் வழங்கிய ஆவணத்திலேயே அவர் மேற்கண்டவிடயத்தினைக் கோரியுள்ளார். அந்த ஆவணத்தில், வடக்கு, கிழக்கில் உள்ள விகாரைகள் மற்றும் நாடாளவிய ரீதியில் உள்ள விகாரைகள் மற்றும் பௌத்த வரலாற்றுஅடையாளங்களை மறுசீரமைப்பதையும் அவற்றின் பாதுகாப்பையும் உறுதி செய்யவேண்டும்.

நாடாளவிய ரீதியில் உள்ள தொல்பொருளியல் அடையாளங்களையும், அந்தப் பகுதிகளையும் பேணிப் பாதுகாப்பதோடு அவற்றை நிர்மாணிப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்தொடரப்படவேண்டும்

அத்துடன், தொல்பொருள் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் நிதிப்பங்களிப்பு உள்ளிட்ட உதவிகளைத்தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதற்கு அனுமதி அளித்தல்வேண்டும்.

நாடாவிய ரீதியில் பல்வேறு குழுக்களால் இன, மத வாதங்களை மேலெழுப்பி முரண்பாடுகள், மோதல்களை உருவாக்கும் செயற்பாடுகள் தோற்றம்பெற்று வரும் சூழல் அவதானிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்விதமான நிலைமைகளை முழுமையாகக்கட்டப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது.

## சஜித்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பண்டாரநயக்கவே. அவ்விதமாகக் கட்சியை உடைத்து வெளியேறியவர்களில் இறுதியானவர் சஜித் பிரேமதாச.

இவர்களின் நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை ஒருதடவை கவனத்தில் கொள்ள வேண்டி யுள்ளது. சஜித் பிரேமதாசவின் அரசியல் வாழ்க்கையைநாம்முடிவுக்கு கொண்டுவருவதுபொருத்தமானது அல்ல. அவரை சற்று விட்டுப்பிடிக்கவேண்டும்.

அவரது அணியினர் சிறுசிறுகுழுக்களாகஎம்முடன் இணைந்துகொள்வதில் எமக்கு பிரச்சினைகள் இல்லை. ஆனால் ஒன்றாக இணைந்துகொள் வார்களாயின் சஜித் பிரேமதாசவுக்கும் கட்சிக்குள் மீண்டும் வருவதற்கு வழி ஏற்பட்டுவிடும்.

அதுமட்டுமன்றி எமக்கு மிகவும் கோமாளி எதிர்க் கட்சித்தலைவர் ஒருவர் கிடைத்துள்ளார். அவரை மிக இலகுவாக இழப்பது பொருத்தமானது அல்ல. அதுமட்டுமன்றி அவரை ஜனாதிபதி வேட்பாளராகவும் பெயரிட்டுள்ளார்கள். அது இன்னமும் வேடிக்கையாக இருக்கப்போகின்றது - என்றார்.

## நல்லைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதில்உள்ளடக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வையொட்டி பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப்பெற்றிருந்தது.

## இன மோதலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சியாளர்களால் முடியவில்லை.

2015 ரணில் விக்கிரமசிங்கபிரதமராகஇருந்தபோது ஜெனிவாவுக்குச் சென்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் என்று எழுத்துமூலமாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட அனைத்தின மக்களினதும் மீளிணக் கத்துக்கான பொறிமுறைதான் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவாகும். ஆனால் அந்தப் பொறிமுறையை முன்னெடுக்காது, தற்போது இனங்களுக்கு இடையில்மோதல்களைஉருவாக்குவதற்காக மதவாதம் கையிலெடுக்கப்பட்டுள்ளது. அந்த விவகாரம் சம்பந்தமாக ஒவ்வொருவரும் பேசி மோதும் நிலைமைகளை உருவாக்குவதற்கான சதி மேற்கொள்ளப்படுகின்றது - என்றார்.

## முப்பொரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பன்னாட்டு அமைப்பின் பொறுப்பாளர்களான முனைவர் மு.இறைவாணி, முனைவர் மு.பாமா ஆகியோ ரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன்சேவைகள்செய்த பலருக்கும்விருதுகள்வழங்கி வைக்கப்படவுள்ளது. (03)

## விவசாய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செயலகத்தின்செயலாற்றுகை முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கையொன்றை ஜூலை மாதம் தன்னிடத்தில் கையளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

அத்தோடு விவசாயத்திற்கான காணிகளை விடுவிப்பது தொடர்பிலான விடயங்களை விவசாய செயலாளர் அலுவலகத்திற்கு அறிவித்த பின்னர் தீர்விற்கான பரிந்துரைகளை தனக்கு தெரியப்படுத்துமாறும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் காமினி சேனநாயக்கவின் தலைமையில் நிறுவப்பட்டுள்ள விவசாய நவீனமயப்படுத்தலுக்கான குழுவின் புத்தாக்க செயற்பாடுகள் தொடர்பிலும் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது.

மேற்படி விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் போது அது குறித்த தெரிவுகளை கொண்டிருக்கும் தனியார் துறையின் முக்கியஸ்தர்கள், துறைசார் தெரிவுகளை கொண்ட அரச துறையின் முக்கியஸ்தர்கள் மற்றும் இளையோரின் பங்களிப்பை பெற்றுகொள்ளவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பெருந்தோட்டச்செய்கை, மீன்பிடித்துறை, மீன்வளர்ப்பு, பூக்கள் உற்பத்தி, மரக்கறி, பழங்கள் மற்றும் தானிய வகைகள், பால், முட்டை உள்ளிட்ட அனைத்துதொழில் துறைகளும்நவீன மயப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவுறுத்தினார்.

2048 அபிவிருத்தி அடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அவசியமான நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் தொடர்பில் உரிய துறை வர்த்தகர்களை தொடர்புபடுத்திக்கொண்டு அமைச்சு செயலாளர்களின் தலைமையில் நிறுவப்படும் உபகுழுக்கள்வாயிலாக கலந்தாலோசித்து எடுக்கப்படும் தீர்மானங்களையும் தனக்கு தெரியப்படுத்துமாறுஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணித்துள்ளார்.

## கண்டி ஆயர் - .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ளபோதிலும், இன்னும் அவர்களின் நல்ல வாழ்க்கைத் தரத்திற்கு உத்தரவாதம் வழங்கப்படாமை குறித்து ஆயர் வலியுறுத்திக் கூறினார். அத்துடன், அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மத்திய மாகாணத்தில் கல்வித்துறையில்ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினை கள் குறித்து இதன் போது, ஆயர், ஜனாதிபதிக்கு விளக்கமளித்ததுடன், ஆயர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரையும் ஒருங்கிணைத்து சில பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.

அத்துடன், நுவரெலியா மற்றும் ஏனைய பெருந்தோட்டங்களின் வீதிக் கட்டமைப்பு சேதம் அடைந்துள்ள தால்மக்கள்கடும்சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்த ஆயர், வீதிக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்துதருமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார்.

## ஜப்பான் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்துவதற்கான அனுசாசனத்தை பெற்றுக்கொள்வதற்காக விகாரைகள் மற்றும் தேவாலயம் கட்டளைச் சட்டத்தின் திருத்தச்சட்டமூலம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

பெப்ரவரி 19 கண்டி ஜனாதிபதி மாளிகையில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிளால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க மூன்று மாதங்களுக்குள் மேற்படி திருத்தச் சட்டமூலத்தைத் தயாரித்து மகாநாயக்கர்களிடத்தில் கையளித்துள்ளார் ஜனாதிபதி.

திரிபீடகம் மற்றும் பௌத்த இதிகாச நூல்களை பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை துரிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மகாநாயக்கர்கள் இதன்போதுஅறிவுறுதியிருந்த நிலையில் அப்பணிகளை விரைந்து முன்னெடுக்குமாறு புத்தசாசன அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி பணிப்பரை விடுத்தார்.

மேற்படி ஏற்பாடுகளின் போது நான்கு பீடங்களினதும் மாகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு உரிய திருத்தங்களைச் செய்த பின்னர் அமைச்சரவையில் சமர்பிக்குமாறு அறிவுறுத்தினார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

பெருநகர திட்டத்தின் கீழ் இந்தகண்டிநகரைவிரைவாக அபிவிருத்தி செய்ய நான் எதிர்பார்க்கிறேன். கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் வெற்றியடைந்ததன் பின்னர் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடியுமென நான் நம்புகிறேன். அதன்பிறகு, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அதிக முதலீடுகள் தேவைப்படுகின்றன.

மேலும், அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இந் நாட்டிற்கு அழைத்து வர வேண்டும். திருகோணமலை புதிய நகரத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கண்டிபெருநகர அபிவிருத்தி திட்டத்தை இவ்வருடத்தில்ஆரம்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதன்பின்னர் யாழ்ப்பாண பெருநகர அபிவிருத்தி செய்யப்படும்.

அதேபோல், ஜப்பானிய உதவியின்கீழ், மகாவிகாரை பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ எதிர்பார்க்கின்றேன். இங்கு தேரவாத பௌத்தத்தை கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு மற்றும் மனம் குறித்து கற்பிக்க வேலைத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

விவசாயத்தைநவீனமயமாக்குவதில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். எதிர்காலத்தில் ஒரு ஹெக்டெயருக்கு 08 மெற்றிக் தொன் அறுவடை செய்ய இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும். இந்தவிவசாயநவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் ஒரு கறவை மாட்டிலிருந்து 10 லிற்றர் பால் பெறும் திறனை ஏற்படுத்த முடியும்.

கண்டிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை ஓரிரு நாட்கள் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மேலும், சுற்றுலா வழிகாட்டிகளின் பதிவும் மிகவும் முக்கியமானது. அவர்களுக்கு தலதா மாளிகை குறித்தும் பௌத்த வரலாறு, மலையக வரலாறு பற்றிய அறிவும் வழங்கப்பட வேண்டும் - என்றார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622

English Classes

K.Ganash (BA.Pera)
Spoken English With Grammar
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில் புரிபவர், ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E O/L Literature
077 766 8725

10kg & 11kg க்கு மேல்
சாதார சேவை (2-3 கிழமை) | விரைவு (Express) (3-6 நாட்கள்)
லண்டன் UK 1140/=
பிரான்ஸ் France 1970/=
ஜேர்மனி Germany 1800/=
சுவிஸ் Swiss 2130/=
கனடா Canada 2850/=
நோர்வே Norway 3050/=
அவுஸ்ரேலியா Australia 2300/=
அமெரிக்கா USA 2550/=
அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

யாழ்ப்பாணம் நல்லூர் ஆவரங்கால் கைதடி கிளிநொச்சி வவுனியா திருகோணமலை கொழும்பு
075 330 5500 070 330 5500 076 122 1566
இந்தியா-சீனா-தாய்லாந்-டுபாய் போன்ற நாடுகளில் இருந்து வியாபார நோக்கத்திற்காக பொருட்களை இலங்கைக்கு விரைவாகவும் குறைந்த கட்டணத்திலும் இறக்குமதி செய்து தரப்படும்
உங்கள் பொருட்கள் விபரங்களையும் நிறையையும் வட்ஸ்சப்(whatsup) செய்வதன் ஊடாக கட்டண விபரங்களை அறிய முடியும்
0753305500

விமான நிலைய போக்குவரத்து மற்றும் சுற்றுலா ஏற்பாடுகள்

நாடுமுழுவதும்
நட்சத்திர விடுதிகளில் தங்குமிட வசதிகள்
சுற்றுலா ஒழுங்கமைப்பு வசதிகள்
போக்குவரத்து வசதிகள்
Asiazone Vacation (Pvt) Ltd
#45A, Pennyquick lane, Colombo 06.
#551A, Kasthuriyar Road, Jaffna.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் +94 77 068 4905

காலைக்கதிர்
Kalaikkathir

## சோளத்தின் மீது விதிக்கப்பட்ட விசேட சரக்கு வரிகள் குறைப்பு!



கொழும்பு, மே 21

திரிபோஷாஉற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சோளத்தின் மீது விதிக்கப்பட்ட விசேடசரக்குவரி 75 ரூபாவில் இருந்து 25 ஆக குறைக்கப்பட்டுள்ளது. (05)

## நாட்டில் 400 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் நாளொன்றுக்குப் பதிவு!

இலங்கையில்நாளொன்றுக்கு 400 இற்கும் மேற்பட்ட டெங்குநோயாளர்கள்பதிவாகி வருகின்றனர் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர்வைத்தியர்நளின் ஆரியரத்னதெரிவித்துள்ளார்.

மழையுடன் கூடிய கால நிலை காரணமாக நாளுக்கு நாள் அதிகரித்துவரும்டெங்கு நுளம்பு பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் உள்ள 370 வைத்திய அதிகாரி பிரிவுகளில் 59 டெங்கு அபாய பிரிவுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு கூறியுள்ளது.

இலங்கையில் 50 வீதமான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலும் இதே வேளை வத்தளை, நீர் கொழும்பு, களனி, மஹர மற்றும் ஜாஎல பிரதேசங்களிளும் அதிகளவானவர்கள் பதிவாகியுள்ளனர். (05)

## நடமாடும் வாக்களிப்பு நிலையம் உருவாக்கம்!

### ஆராய்கிறோம் என்கிறார் நிமல் புஞ்சிஹேவா



நடமாடும் வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்தகைய நபர்களின் வாக்குகள் அவரது இல்லத்திற்குச் சென்று சேகரிக்கப்படும் என்றும் அதற்காக தற்போதைய தேர்தல் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பல தொழில்களில் பணிபுரியும் வாக்காளர்கள் தேர்தலுக்கு முந்தைய நாளில் வாக்களிக்க ஏதுவாக சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (05)

## கௌதாரிமுனை காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் மக்கள் கருத்துக்களை கேட்டறியும் கலந்துரையாடல்



கௌதாரிமுனை பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றானை மின்னுற்பத்தி நிலையம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டறியும் கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த பகுதிக்கு நேற்று (சனிக்கிழமை) விஜயம்மேற்கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது குறித்த காற்றாலை அமைப்பது தொடர்பில் மக்களின் எதிர்பார்ப்புக்கள், மற்றும் நன்மை தீமைகள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் குறித்த காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்திற்கு அனுமதி கோரப்பட்டது.

அந்த அனுமதிக்கு முன்னர் அந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து நன்மை தீமைகள் பற்றி அறிந்த பின்னரே அனுமதி வழங்க முடியும் என நாடாளுமன்றஉறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த பகுதிக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் பிரதேசமக்களிடம்கலந்துரையாடி விடயங்களை பெற்றுக் கொண்டார் என ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த காற்றாலை அமைப்பதால் தமது மீன்பிடி தொழில் பாதிக்கப்புடும் எனவும், அதனை தாம் எதிர்ப்பதாகவும் பிரதேச மக்கள்தெரிவிக்கின்றனர்.(05)

## மதுபோதையில் தந்தையை கொலைசெய்த மகன் கைது

மதுபோதையில் தந்தையை மகன் அடித்துக் கொன்ற கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் வெலிப்பன்னை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். தந்தையும், மகனும்மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்திருந்த நிலையில் இருவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது தந்தை மீது மகன் மேற்கொண்ட தாக்குதலில் அதே இடத்தில் 73 வயதான தந்தை உயிரிழுந்துள்ளார். இதையடுத்து 32 வயதான மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (02)






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சீர்தூக்கி ஆராய்வோம்

அண்மைக் காலமாக ஆசிரியர் மாணவர் உறவு குறித்து வேண்டத்தகாத செய்திகள் பல வெளியாகின்றன. கேட்பதற்கு மனச்சங்கடங்களை ஏற்படுத்தும் இந்தச் செய்திகள் எதிர்காலம் குறித்த அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன. ஏன் இந்த நிலை?

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று தெய்வத்திற்கு முன்பாக ஆசிரியர்களை வைத்துப் போற்றிய ஒரு சமூகத்தின் மத்தியிலும் பெற்றோரையும் மூத்தோரையும் எப்போதும் காலில் விழுந்து வணங்கியெழும் சகோதர சமூகத்தின் மத்தியிலும் இருந்து இப்படி விழுமியம் தவறிய ஆசிரியர்கள் எப்படித் தோன்றினார்கள்? இதற்குக் காரணம் என்ன?

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அதிலும் குறிப்பாக பெண் மாணவர்களுக்கும் இடையிலான உறவுகள் குறித்த இந்தச் செய்திகள் அனைத்து ஆசிரியர்களையும் குறிப்பனவல்ல. இன்னும் சொல்லப்போனால், மிக மிகக் குறைந்தளவிலான – ஆசிரியர் சமூகத்தில் ஒன்றல்லது இரண்டு வீதத்திலும் குறைவான – ஆசிரியர்கள் மட்டுமே தவறிழைக்கிறார்கள். அப்படியிருக்கும்போது அதனைப் பெரிதுபடுத்தலாமா என்கிற கேள்வி நியாயமானதுதான். ஆனால் ஒரு குடம் பாலில் ஒரு துளி விசம் போன்றதல்லவா இது. எப்படிக் கண்டும் காணாமல் விட்டுவிட முடியும்?

ஒரு காலத்தில் ஆசிரியர்களைக் கண்டவுடன் எழுந்து நிற்கும் அளவிற்கு மரியாதை வைத்திருந்த ஒரு சமூகத்தில், முச்சக்கர வண்டியில் சென்ற ஓர் ஆசிரியர் மாணவியைக் கூடவே எங்கு அழைத்துச் செல்கிறார் என்று பின்னாலேயே சென்று உளவு பார்த்து, பின்னர் இருவரையும் பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைக்கும் அளவிற்கு (மட்டக்களப்பில் நடந்த சம்பவம்) நிலைமை மோசமாகி இருக்கும் நிலையில் அது பற்றி எப்படி அக்கறைப்படாமல் இருக்கமுடியும்?

ஒரு குழந்தை இந்த உலகிற்கு வந்தவுடன் அறிமுகமாகும் தாய், தந்தையை அடுத்து அது தன் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்வதும் பின்பற்றுவதும் ஆசிரியர்களைத்தானே. பெரும்பாலான குழந்தைகளின் சிறுவயது கதாநாயக விம்பம் ஆசிரியர்கள்தானே. அப்படியிருக்கையில் அதில் ஒரு சிலர் தவறிழைத்தாலும் அது ஒட்டுமொத்த மாணவர்களுக்கும் முன்னுதாரணமாகி விடும் அபாயம் உண்டல்லவா? அதனாலேயே இது குறித்துச் சிந்திக்கவும், சீர்ப்படுத்தவும் வேண்டியிருக்கின்றது.

இந்த விடயங்களைத் தனி மனித பாலியல் ஒழுக்கம்சார் விடயங்கள் என்று ஒத்துக்கி வைத்துவிட்டுச் செல்லவும் முடியவில்லை. பாலியல் ஒழுக்கத்தைத் தனது உயர் விழுமியங்களில் ஒன்றாக வைத்துள்ள சமுகங்களின் மத்தியில் ஆசிரியர்கள் பாலியல் ஒழுக்கம் தவறுபவர்களாக, சிறுவர்களைப் பாலியல் இச்சைக்கு உட்படுத்துபவர்களாக இருப்பதை எப்படி நியாயப்படுத்த முடியும்? தனி மனித ஒழுக்கப் பிறழ்வு, குற்றம் என்பதைத் தாண்டி இந்த விடயத்தை அணுகி அதனைச் சீரமைக்கவும் ஒழுங்குபடுத்தவும் என்ன வழி இருக்கிறது? அதன் மீது கவனம் செலுத்தப்படுகின்றதா?

கல்வியை நவீனப்படுத்தவும் மறுசீரமைக்கவும் அரசுத் தலைவர் எடுத்துவரும் நடவடிக்கையின் கீழ் இது தொடர்பிலும் அக்கறை செலுத்தப்படவேண்டும். அது மட்டுமன்றி ஆசிரியர்கள் சமூகத்தின் மிக உயர்வான இடத்தில் முன்னர் இருந்த நிலையை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் ஆசிரியர் சமூகமும் சமூகத்தின் ஏனைய பிரிவுகளும் முழு மூச்சில் மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர்பணியில்சேர்வதற்குமுன்பாகஅனைவரும் உளவளச் சீராய்வுக்கு உட்படுத்தப்படுவதும் அவர்கள் ஒவ்வொருவரினதும் சிறுவயதுப் பின்னணி உள்ளிட்ட அனைத்துப் பின்னணியும் அவர் ஆசிரியராவதற்கான தகுதியைக் கொண்டிருக்கின்றனவா என்பதை ஆராய்வதும் கட்டாயமாக்கப்படவேண்டும்.

# ஜூலைக் கலவரம் போன்று மீண்டும் ஓர் அனர்த்தம்!

### கே.வி.தவராசா காட்டம்



தமிழர்உரிமைப்போராட்டத்தின் மீது தடைக்கற்கள் நடாதீர்கள் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

'யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளாகின்றன. தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு இன்னும் தீர்வைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை.

தமிழர் தரப்புத் தலைமைத்துவம் இன்னும் வலுப்பெற்று தமிழினத்துக்காக உயிர் நீத்த அத்தனை தியா கிகளினதும் கௌரவம் பேணும் தரத்தில் உரிமைக் குரலை உயர்த்தவில்லையாயினும்மக்களின்இடைவிடாத சாத்வீகப் போராட்டம் இன்னும் இடைவிடாது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

அதுமட்டுமே இன்றளவும் நமக்கிருக்கிருக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் சுடரை அனைத்துவிடும் செயற்பாடுகளில் இப்போது சிலர் இறங்கியிருக்கின்றார்கள் என்பதுதான் வேதனையானது.

யுத்தம் முடிந்த கையோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதில் பல எதிர்ப்புகள் இருந்தன.

காலம் செல்லச் செல்ல தமிழர்போராட்டத்தில் இருந்த நியாயத்தை பெரும்பான்மை மக்கள் புரிந்துகொள்ளும் சூழலை காலம் மெல்ல மெல்ல ஏற்படுத்தியிருந்தது.

மக்களின் வேதனையும் உயிரிழப்பின் துன்பமும் மாறாத வடுவானதால் அதை நினைவு கூர்தல் பிழையல்ல என்ற நிலைப்பாட்டுக்கு பெரும்பான்மை மக்களில் நியாயமாகச் சிந்திக்கும் மக்கள் வரத்தொடங்கியிருக்கும் காலத்தில் தமிழர் கோரிக்கை நியாயமானது என்றும் ஏதேனும் தீர்வு அவர்களின் நியாயமான குரலுக்கு அளிக்கப்படுவதே தர்மமும் அறமும் என்று காலம் கனியத் தொடங்கியிருக்கும் பொழுதில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளின் பெயரால் சிலர் முதிர்ச்சியற்ற சுயநல அரசியலைச் செய்ய முனையும் போதுதான் தமிழர் போராட்டம் கொச்சைப்படுத்தப்படும் நிலை தோற்றம் பெறுவதோடு, மீளவும்இனங்களுக்குஇடையேயான புரிதலை இனவாதமாக மாற்ற சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கும்சிலருக்கு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பொரளையில் இருந்துதான் அதுவும் கனத்தை மயானத்தில்இருந்துதான் 1983 ஜீலைக் கலவரம் ஏற்படத் தூபமிடப்பட்டது.

40ஆண்டுகளைநெருங்குகின்ற வேளையில் மீளவும் அதே இடத்தில் இருந்து மீளவும் ஓர் அனர்த்தத்தை ஏற்படுத்த வழியேற்படுத்திக் கொடுக்க சிலர் முனைவது பேரினவாதத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகளை தூண்டும் செயற்பாடுமாகும்.

வடக்குகிழக்கில் நினைவேந்தல் ஒவ்வொரு முறையும் பல்வேறுதடைகளையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டே வந்தது. அதனைத் தடுக்க படைத்தரப்பு சட்டம் என்ற ஆயுதத்தைத்தான் தூக்கி நின்றது.

இப்போது கொழும்பில் இந்த முள்ளிவாய்யகால் நினைவேந்தல் நிகழ் வைத் தடுக்க முயன்ற நபர்கள் இனவாதத்தைக் கையிலெடுக்கவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைக் கொச்சைப்படுத்தவும் வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்ஒன்றுநெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் இம்முறை தமிழர் தரப்பு இனவாதத் தீயின் வாய்க்கும் வீழ்ந்து விடாமல் கவனமாகச் செயற்படவேண்டிய தருணமிது.

ஏனெனில்சர்வதேசத்தின் பிடிமானம்இன்னும்முழுமையாகத் தளர்ந்துவிடவில்லை. அடுத்த தேர்தல் ஒன்று வரும் போது தமிழர் உரிமைக்கான தீர்வுத்திட்டம் நிச்சயம் வலுவான கோரிக்கையாக முன்வைக்கப்படும் வாய்ப்புகள் முகிழ்ந்துகொண்டிருக்கும் நேரத்தில் அதற்குத் தடைக்கற்களைப் போடும் வேலையைச்செய்யக்கூடாது.

எந்தவொரு இன விடுதலைப் போராட்டமும் எடுத்த எடுப்பில் தீர்வுகளைப்பெற்றுக் கொள்ளவில்லை என்பது தான் வரலாறு.

இப்போது நமக் கான காலம் கணியத் தொடங்கியிருக்கின்றது. அதைச் சிதைத்துவிடாமல் பலப்படுத்திப் பாதுகாத்துத் தக்கவைத்துக் கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயம்.

'தலைவன் உரத்துச் சொன்னான் நீங்கள் கூர்மையாகத் தீட்டப்பட்ட கத்திகள் உங்களைமண்ணில்விதைக்கின்றேன். பளிச்சிடுவதும் மங்கிப்போவதும் இனி உங்கள் கைகளிலேயே ஆயுதப் போர் முடிந்துவிட்டது' என்று மௌனப் போரும் புன்னகைஆயுதமும்கவிதை நூலின் வரிகளை ஞாபகத்தில் இருத்திக் கொண்டுகாரிய மாற்றவும் அரசியல் செய்யவும் இளந்தலைமுறைக்கு நாம் அறிவூட்ட வேண்டும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# மதகுடன் மோதிப் படுகாயமடைந்து தூக்கி வீசப்பட்ட நபர் வைத்தியசாலையில் சேர்ப்பு!

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.


குறித்த விபத்து சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த நபர், தனது தோட்டத்தில் காவலுக்காக செல்வதாக கூறிவிட்டு வீட்டிலிருந்து மோட்டார்சைக்கிளில் வெளியேறியுள்ளார்.

இந்தநிலையில் அம்பன் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக மதகுடன் மோதி படுகாயமடைந்து பாலம் ஒன்றினுள் வீசப்பட்டுள்ளார்.

இரவுவேளையாக இருந்ததால் விபத்துக்குள்ளான நிலையிலேயே அதிக நேரம் காணப்பட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் தற்செயலாக அவரை அவதானித்த இளைஞர் ஒருவர் உடனடியாக அம்புலன்ஸ்க்கு அறிவித்துள்ள நிலையில் அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சேர்க்கப்பட்டுள்ளார்.



இதனைத்தொடர்ந்து படுகாயமடைந்த நபர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. (05)

# வட்டுக்கோட்டையில் கறுவா செய்கையை ஊக்குவிக்க விசேட செலயலமர்வு நடந்தது!



வடக்கில் கறுவா செய்கையை ஊக்குவிக்கும் முகமாகமான செயலமர்வொன்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, விளக்க உரை நிகழ்த்தினார்.

அதனைவிட கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் பலரும் இந்த செயலமர்வில் கலந்துகொண்டு, கருத்துத் தெரிவித்ததுடன், பொதுமக்களின் கேள்விகள், சந்தேகங்களுக்குப் பதிலளித்தனர்.

கறுவாச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறைவிளக்கம் இங்குவழங்கப்பட்ட அதேவேளை கறுவா கன்றுகளும் இலவசமாக வழங்கப்பட்டன. (05)

# புலிப் பயங்கரவாதத்தை ஒழித்ததன்மூலம் அனைவரும் நிம்மதியாக வாழ முடிந்தது!

### இராணுவத் தளபதி பெருமிதம்

கொழும்பு, மே 21

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாதத்தை இல்லாதொழித்ததன் மூலம் தேசத்தை ஒன்றிணைத்ததுடன் நாட்டில் அனைவரும் சமாதானமாக வாழ வழி வகுத்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே தெரிவித்துள்ளார்.

இராணுவ நினைவு தினத்தை முன்னிட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், மூன்று தசாப்த கால யுத்தத்தின் போது நாடு முழுவதிலும் உள்ள மக்கள் சொல்லொணா சிரமங்களையும், துன்பங்களையும் அனுபவித்தார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் பின்னர் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக இராணுவ வீரர்கள் பெருமளவில் பங்களித்தார்கள் என்றும் இதனை இலங்கையர்கள் தொடர்ந்தும் நினைவில்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழித்தல், பேரிடர் மற்றும் கொரோனா தொற்றுநோய் கட்டுப்பாடு ஆகியவற்றின் போது, தங்கள் சொந்த உயிருக்கு ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல், இராணுவம், மீட்பு மற்றும் உதவிக்கு வந்தது என்றும் இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார். (05)

# எமது கொள்கைகளுக்கு முரணாக ஜனாதிபதி செயற்பட்டால் உரிய நடவடிக்கை எடுப்போம்!

## சாகர காரியவசம் திட்டவட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மக்களாணையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி வகிக்கிறார். எமது கொள்கைக்கு முரணாக செயற்பட்டால், அது தொடர்பில் உரிய தீர்மானம் எடுப்போம். பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் என்பதில் உறுதியாக உள்ளோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் நாட்டு மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள்.

பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிய பின்னர் அரசியல் ரீதியில் பல சவால்களை எதிர்கொண்டோம்.

நாட்டில் போராட்டம் தீவிரமடைந்த நிலையில் ஜனநாயகம் மற்றும் சட்டம், ஒழுங்கு ஆகியவை கேள்விக்குறியாக்கப்பட்டன. ஒன்றில், சட்டத்தை நாங்கள் கையில் எடுக்க வேண்டும் அல்லது சட்டத்தை முழுமையாக செயற்படுத்தும் தலைமைத்துவத்தை தோற்றுவிக்க வேண்டும் என்ற இரு பிரதான தீர்மானங்கள் காணப்பட்டன.

சட்டத்தை எம்மால் கையில் எடுக்க முடியாது என்பதால் சட்டத்தை முறையாக செயற்படுத்தும் தலைமைத்துவத்தை தோற்றுவிக்க ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி சட்டம், ஒழுங்கினை முறையாக செயற்படுத்தினார்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

பொதுஜன பெரமுனவின் மக்களாணை தான் தற்போதும் நடைமுறையில் உள்ளது. ஆகவே, கட்சியின் கொள்கையை அடிப்படையாக கொண்டே ஜனாதிபதி செயற்பட வேண்டும்.

பொதுஜன பெரமுனவின் கொள்கைக்கு முரணாக ஜனாதிபதி செயற்பட்டால், அது குறித்து உரிய தீர்மானத்தை எடுப்போம். கட்சியின் கொள்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தான் ஜனாதிபதி எம்முடன் இணக்கமாக செயற்படுகிறார். எக்காரணிகளுக்காகவும் கட்சிக் கொள்கையை விட்டுக்கொடுக்கமாட்டோம்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது கட்சிக் கொள்கைக்கு அமைய, ஜனாதிபதி தேர்தலில் செயற்பட்டால் அவருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் என்பதில் உறுதியாக உள்ளோம். - என்றார். (05)

## மின்னல் தாக்கியதில் பதுளையில் ஒருவர் பலி!

பதுளையில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் பதுளை - ரிதிமாலியத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மொறான பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

அப்பகுதியிலுள்ள நீர் வடிகாலுக்கு அருகில் குறித்த நபர் நின்றிருந்த சந்தர்ப்பத்தில் மின்னல் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் மின்னல் தாக்கியதில் அவரது கையடக்க தொலைபேசியும் பாரிய சேதமடைந்துள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் நீதிவான் பரிசோதனைகளுக்காகச் சம்பவ இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

## இலங்கையின் கடன் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜி 7 நாடுகள் வரவேற்பு!

கொழும்பு, மே 21

இலங்கையின் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைமையின் கீழான நடவடிக்கைக்கு ஜீ - 7 நாடுகளின் கூட்டணி வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஹீரொஸிமா நகரில் வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஜீ - 7 நாடுகளின் தலைவர்களது 49 ஆவது மாநாடு நேற்று (சனிக்கிழமை) வரை இடம்பெறவுள்ள நிலையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும் நடுத்தர வருமான நாடுகளுக்கு தீர்வு காண்பதற்கான எதிர்கால பலதரப்பு முயற்சிகளுக்கு ஒரு வெற்றிகரமான முன்மாதிரியாக விரைவான தேர்வு அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது. (05)

## இலங்கை கிரிக்கெட் சபை தலைவராக ஷம்மி சில்வா போட்டியின்றி தெரிவானார்!



2023 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக ஷம்மி சில்வா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் தற்போது நடைபெற்று வரும் வருடாந்த பொதுக்கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் சபையின் தேர்தல் குழு இந்த முடிவை அறிவித்தது.

2019 இல் முதல் தடவையாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஷம்மி சில்வா மூன்றாவது முறையாக மீண்டும் பதவியேற்கவுள்ளார். (05)

## புதையல் தோண்டிய மூவர் சிக்கினார்கள்

*புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*பசறை - பிபில வீதி, 13ஆம் கட்டைப் பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*கொழும்பு - ஹோமாகம பகுதியை சேர்ந்த பூசாரியான 60 வயதுடைய பெண்ணொருவரும், 30 மற்றும் 40 வயதுடைய ஆண்கள் இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்*

*புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் உட்படப் பூசைப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.*

*குறித்த பகுதியில், ஆங்கிலேயர் காலத்தில் ஆயுத களஞ்சியசாலை இருந்தது என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த முன்னோர்கள் கூறி வந்துள்ளனர் என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (02)*

## காலாவதியான ரின் மீன்கள் விற்பனை: சீன பிரஜை உட்பட ஆறு பேர் கைது!



காலாவதியான ரின் மீன்களை விற்பனை செய்த சீன பிரஜை உட்பட ஆறு பேரை பேலியகொட பொலிஸார் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ரின் மீன்களின் பெறுமதி 80 லட்சம் ரூபாவுக்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவற்றை விற்பனை செய்வதற்கு வேறொரு நிறுவனத்தின் பெயரையும் அவர்கள் பயன்படுத்தி உள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (05)

## தமிழ்நாட்டில் ஈழத் தமிழருக்கு 22 ஆண்டுகள் சிறைத் தண்டனை

### சிறுமி மீது பாலியல் கொடுமை புரிந்ததற்காக

தமிழ்நாடு அகதி முகாமில் 13 வயதான சிறுமியைத் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய உட்படுத்திய குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவருக்கு 22 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம் மாவட்டம், மண்டபத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வந்த இலங்கையருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மகிளா நீதிமன்றம் அவருக்கு சிறை தண்டனை விதித்துத் தீர்ப் பளித்தது.

வழக்கின்படி குற்றஞ்சாட்டப்பட்ட 52 வயதான இலங்கையர் 2022 இல் சிறுமியை பாலி யல் வன்புணர்விற்கு உட்படுத்தினார் என்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக நீதிமன் றம் தெரிவவித்தது.

இதேவேளை பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ. 5 லட்சம் இழப்பீடு வழங்க தமிழ்நாடு அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பாடசாலை மாணவரால் ஆசிரியர் மீது தாக்குதல்!

### பம்பலப்பிட்டியில் சம்பவம்

*பம்பலப்பிட்டி பிரதேச பாடசாலையொன்றில் 10 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் வகுப்பு ஆசிரியர் ஒருவரைத் தாக்கியுள்ளதாகப் பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.*

*தாக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆசிரியரும் மாணவரும் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பாடசாலையின் வகுப்பறையில் ஆசிரியர் ஒருவரால் தனது இளைய சகோதரர் தாக்கப்படுவதை அறிந்த அவரது 22 வயதுடைய சகோதரர் பாடசாலைக்குள் புகுந்து ஆசிரியர் ஒருவரை நாற்காலியைத் தூக்கி தாக்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது. (05)*

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கடுமையாக சாடும் திலீபன் எம்.பி!

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவதில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.



வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் கலந்த கொண்டபின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

மாவட்ட மற்றும் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வருவதில்லை. ஆனால், தனிநபர்களின் பிரச்சினைக்கு உடனடியாக வருகிறார்கள்.

மன்னாரில் இடம்பெற்ற மண் அள்ளும் பிரச்சினையில் சில மதகுருமாருடன் இணைந்து சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடியாக மண் அள்ளுவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

இதைவிட, மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் உள்ளன. இதேபோல் அந்த பிரச்சனைகளையும் பேசி மக்களுக்கான தீர்வைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

சில நாள்களுக்கு முன் ஜனாதிபதி தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. அந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி சார்ந்த எந்த கருத்துக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசவில்லை. மாறாகத் தொல்பொருள் சம்பந்தப்பட்ட பிரச்சினை தான் பேசப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரம், வயற்காணிகளை விடுவித்தல், தொழில் துறைகளை ஏற்படுத்துதல் தொடர்பில் அங்கு பேசவில்லை. எங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் காணி விடுவிப்பு, காணி ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்தல், நில அளவை பிரச்சினைக்குத் தீர்வு காணல் தொடர்பில் பேசி முன்னேற்றம் கண்டுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாக வனத் திணைக்களத்துடன் பேசி காணிகள் விடுவிக்கப்படுகின்றன. மத்தியதர வர்க்கத்தின் காணிகள் விடுவிக்கப்படுகின்றன. ஆவணங்கள் வழங்கப்படுகின்றன. எனவே நாங்கள் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி வருகிறோம் எனத் தெரிவித்துள்ளார். (05)

## தினேஷ் ஷாப்டரின் சடலத்தை தோண்டியெடுக்க மன்று உத்தரவு!

கொழும்பு, மே 21

ஜனசக்தி காப்புறுதி குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ாப்டரின் சடலத்தை மேலதிக விசாரணைகளுக்காக விசேட பொலிஸ் பாதுகாப்பில் தோண்டி எடுக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜயசூரிய வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஐவரடங்கிய விசேட வைத்தியக் குழு, சடலத்தை மீட்கும்போது, அங்கிருக்க வேண்டும் என்பதற்காக அவர்களின் பயண வசதிகள், தங்குமிட வசதிகள் மற்றும் உள்ளூர் நலன்கள் அனைத்தையும் மேற்கொள்ளுமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு மற்றுமொரு உத்தரவை நீதிவான் பிறப்பித்துள்ளார்.

தினேஷ் ஷாப்டரின் மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய அவரது உடலைத் தோண்டி எடுக்க வேண்டியது அவசியம் என 5 பேர் கொண்ட கொழும்பு சிறப்பு மருத்துவ சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## சிறுவர் பாதுகாப்புக்காக சமூகப் புலனாய்வு பிரிவு!

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தகவல்

சிறுவர்களின் பாதுகாப்புக்காக சமூக புலனாய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பதிவாகி வருகின்ற இளம் தலைமுறையினருடன் தொடர்புடைய சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பில் கவனத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறுவர்களின் பாதுகாப்புக்காக சமூகப் புலனாய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எமது எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக சகல பாடசாலைகளினதும் ஒத்துழைப்புடன் இந்த புலனாய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மைக்காலமாக நாட்டின் ஒட்டுமொத்த அமைப்பையும் பலவீனப்படுத்துவதற்கு வழிவகுத்த பிரச்சினைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பொது சேவையின் தரத்தை உயர்த்துவதுடன் தற்போதுள்ள அமைப்பில் தரமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. புதிய பட்டதாரிகளின் ஆளுமை, ஆர்வம், அறிவு மற்றும் தலைமைப் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டியது முக்கியத்துவமுடையதாகும். அனைத்துத் துறைகளிலும் சரியான நேரத்தில் சீர்திருத்தங்கள் அவசியமாகும். (05)

OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable

## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்

3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir




We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

# Special Delivery!




Today, a letter can go a long way in just a few days. For example, suppose you live in New York. You send a letter to your friend who lives in Los Angeles. That letter will get there in three or four days. How does mail get from your mailbox to your friend's mailbox? It starts when you put your letter into the mailbox. When your letter carrier brings your mail, he or she picks up your letter. Your letter carrier then takes your letter back to the post office. Then, your letter is bundled with other mail that is going to other zip codes.

Your letter then goes to a large central-processing facility, or building. All nearby post offices send their mail to that facility each day. There, the mail is sorted. Large sorting machines do a lot of the sorting work, but sometimes, people have to do some of the sorting. Some of the mail goes to other zip codes in New York. Some of it goes to zip codes in other states. When all of the mail has been sorted, the mail that is going to Los Angeles is put in one place. Then it is sent on a plane to Los Angeles.

When your letter gets to Los Angeles, it is sent to the main Los Angeles processing center. That processing center sorts through all of the mail that comes into it. Your letter is bundled in a group with all of the other mail going to the same zip code. All of that mail is then sent to the post office in that zip code. Each post office gets a delivery from the processing center every morning. Your friend's letter carrier goes to the post office in the morning. Next, the letter carrier picks up the mail for his or her route. Then, the letter carrier sorts, bundles, and loads the mail.

Finally, your friend's letter carrier delivers your letter to your friend.

**1. What happens after a letter carrier takes your letter to the post office?**
- A. Your letter carrier picks up your letter.
- B. You leave the letter in your mailbox.
- C. You write your letter.
- D. Your letter is sent to the central processing facility.

**2. Which is the last step in sending a letter?**
- A. Your letter is bundled with other letters going to Los Angeles.
- B. A letter carrier picks your letter up.
- C. A letter carrier delivers your letter.
- D. Your letter gets sent to a central processing facility.

**3. What is the author's purpose?**
- A. to get you to become a letter carrier
- B. to tell a personal story
- C. to tell how mail gets delivered
- D. to get you to call a friend

**4. If you do not put a zip code on your letter, it will probably**
- A. get to your friend on the same day.
- B. not matter.
- C. take less time to get to your friend.
- D. take longer to get to your friend

**5. What do you predict would happen if there were no sorting machines?**
- A. It would take less time to deliver mail.
- B. It would take longer to deliver mail.
- C. Mail could go to more places.
- D. There would be no more mail.

**6. What happens if you write a letter to a friend who lives in your zip code?**
- A. Your letter will not go to the central processing facility.
- B. Your friend will not get your letter.
- C. A letter carrier will take your letter to the central processing facility.
- D. The letter carrier will not be able find your letter.

**7. Why do some packages take longer to process than letters do?**
- A. They are too big for sorting machines.
- B. They do not have addresses on them.
- C. They can't be sent through the mail.
- D. Letter carriers won't deliver packages.

**8. Which is the best summary of the text?**
- A. It is about living in Los Angeles.
- B. It is about how to become a letter carrier.
- C. It is about how letters are sent through the mail.
- D. It is about the cost of postage

---

Letter carriers are responsible for delivering mail. That's a very important job. Think about how many important things come in the mail. Letters, packages, and bills are just a few of the things that letter carriers deliver. Each letter carrier has his or her own route. The people and businesses on that route depend on their letter carrier for their mail. Letter carriers start their day at the post office. They sort the mail for their routes. They bundle the mail and put it into their mail trucks. Then they deliver the mail on their routes. Letter carriers have to be in good shape because they walk a lot. They have to be able to lift heavy packages, too. Delivering the mail is not an easy job, but it is a very important one.

1. Which of these is not something letter carriers do?
   - A. sort mail
   - B. put stamps on mail
   - C. bundle mail
   - D. deliver mail
2. What do letter carriers do first when they start their days?
   - A. deliver the mail
   - B. put the mail into their trucks
   - C. sort the mail
   - D. bundle the mail
3. Which is a compound word?
   - A. outdoors
   - B. businesses
   - C. important
   - D. package



4. Which is a synonym for bundle?
   - A. send
   - B. read
   - C. throw
   - D. pack
5. What does the phrase in good shape mean?
   - A. tall
   - B. good shoes
   - C. the shape of a letter
   - D. healthy

"konwledge isn't free. You have to pay attention"



# Ukraine tells China envoy peace plan must not lose land to Russia

*Ukraine's foreign minister told China's envoy that Kyiv would not accept any peace proposal that involved a loss of territory to Russia or that would freeze the conflict.*

*Ukraine's Foreign Minister Dmytro Kuleba attends a meeting with China's special representative for Eurasian affairs Li Hui, amid Russia's attack on Ukraine, in Kyiv, Ukraine May 16, 2023. Eduard Kryzhanivskyi/Press service of the Ministry of Foreign Affairs of Ukraine/Handout via REUTERS ATTENTION EDITORS - THIS IMAGE HAS BEEN SUPPLIED BY A THIRD PARTY.*

*Ukraine's foreign minister told a top Chinese envoy that Kyiv would not accept any proposals to end the war with Russia that involved Ukraine losing territory or the placing of the conflict on hold, the Ukrainian foreign ministry said.*

*Foreign Minister Dmytro Kuleba made the remarks during a meeting in Kyiv with Li Hui, who is China's special representative for Eurasian affairs and former ambassador to Russia.*

*Kuleba discussed with Li "ways to stop Russian aggression", the Ukrainian Foreign Ministry said in a statement on Wednesday.*

*In his meeting, Kuleba "emphasised that Ukraine does not accept any proposals that would involve the loss of its territories or the freezing of the conflict".*

*Restoring a "just peace" in Ukraine depended on "respect for the sovereignty and territorial integrity of Ukraine", Kuleba said, according to the statement.*

*Li was in Kyiv on Tuesday and Wednesday seeking to promote Beijing-led negotiations to resolve the conflict.*

*Li Hui sitting next to then Russian Prime Minister Dmitry Medvedev in Moscow, Russia, June 29, 2015.*

*China's foreign ministry issued a statement on Thursday in which it said that Li told Ukraine that there is no quick fix to end the crisis.*

*"There is no panacea to resolve the crisis, and all parties need to start from themselves, build mutual trust and create conditions to stop the war and talk," Li said, according to the statement.*

*"China has always played a constructive role in alleviating the humanitarian situation in Ukraine in its own way and will continue to provide assistance to Ukraine within its capacity," the statement added.*

*Li is the highest-ranking Chinese diplomat to visit Ukraine since Moscow invaded in February 2022 and his arrival in Kyiv comes three weeks after Ukrainian President Volodymyr Zelenskyy spoke by telephone with Chinese leader Xi Jinping. Zelenskyy also appointed a new Ukrainian ambassador to China on the same day, the Kyiv Independent media organisation reported.*

*Officials in Kyiv had warned ahead of the Chinese visit that Ukraine did not need "mediation for the sake of mediation".*

*"Ending the war with a compromise at the expense of Ukraine will not work," a senior Ukrainian official, speaking on condition of anonymity, told the French news agency Agence France-Presse.*

*Beijing said the aim of the visit was to "communicate with all parties on the political settlement of the Ukrainian crisis".*

*Li is now expected to visit Moscow, according to the Chinese government, and also Poland, Germany and France to discuss a possible political solution to the conflict.*

*Xi, who visited Moscow in March and has aimed to position China as a neutral mediator, has been criticised for refusing to condemn the Kremlin's attack on its neighbour and the now 15-month-long war. China has also supported Moscow politically.*

*Officials in Beijing recently ordered foreign embassies to remove so-called "propaganda" on display at diplomatic missions in what is being interpreted as an apparent reference to shows of support for Ukraine.*




*A spokesperson for the European Union said the Protocol Department of the Chinese Foreign Ministry circulated a note on May 8 to all diplomatic missions to the effect that they should "respect Chinese laws and regulations" and "not to use the external walls of embassies to carry out politicised propaganda to avoid causing disputes between countries".*

*The note does not specify what might constitute "politicised propaganda", nor communicates further on the matter, said the EU spokesperson.*

*According to diplomats in Beijing, Ukrainian flags and placards set up by the embassies of Canada, France, Germany and other governments are the only public displays by most foreign missions other than tourism advertisements.*

*Countries supporting Ukraine see little current prospect for a negotiated peace, particularly owing to Russia's insistence on achieving its war aims and the Kremlin's demand that Kyiv acknowledge Russia's annexation of the Crimean Peninsula and the Ukrainian provinces of Donetsk, Kherson, Luhansk and Zaporizhia, which most nations have denounced as illegal.*

*Russia's Ukraine land grab: what the annexation means for the war*

*Ukraine has rejected those demands and ruled out any talks with Russia until its troops pull back from all occupied territories.*

*Zelenskyy's own 10-point peace plan also includes an international tribunal to prosecute crimes of aggression, which would enable Russia to be held accountable for its invasion.*

*Zelenskyy told reporters during his recent visit to Italy that there was little point in efforts by certain countries to attempt to "mediate between Ukraine and Russia to end the war", what was needed was a "just peace" based on Ukraine's formula for peace.*

*"Russia started the war. Russia took lives. The war is on our land. We know all the crises that have happened, the challenges: nuclear, environmental, food, energy. Only we know what it is like," Zelenskyy said in respone to questions regarding China or the Vatican's possible role in a peace efforts.*

*"We have not proposed an artificial plan – we have proposed how to get out of this situation, to end the war – according to the law, respecting the UN Charter, international law, people, values," he said, according to a transcript on President of Ukraine's website.*

*Several African countries as well as Brazil and the Vatican have spoken out in favour of peace talks.*

*South African President Cyril Ramaphosa said on Tuesday that Putin and Zelenskyy had agreed to host "an African leaders peace mission" in Moscow and Kyiv, respectively.*

*Ramaphosa did not give a time frame or outline any parameters for the possible peace talks which would involve a delegation of leaders from six African countries to discuss a possible peace plan.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 06 சனிக்கிழமை 20.05.2023 கதிர் 63

## பதுளையில் மின்னல் தாக்கி ஒருவர் இறப்பு

பதுளை – ரிதிமாலியத்த காவல்துறை பிரிவுக்குட்பட்ட மொறான பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று மாலை இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது என்று பொலிஸார் இன்று தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள நீர் வடிகானுக்கு அருகில் குறித்த நபர் நின்றிருந்த சந்தர்ப்பத்தில் மின்னல் தாக்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மின்னல் தாக்கியதில் அவரது கையடக்கத் தொலைபேசியும் சேதமடைந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (02)

# தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும்!



## ரணில் அதீத நம்பிக்கை

தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் கூறுகையில்,

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

எனினும், வடக்கு, கிழக்கு மக்கள் அபிவிருத்தியை மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. போர் ஏன் மூண்டதோ அதற்கான தீர்வையும் அவர்கள் விரும்புகின்றார்கள்.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் விருப்பமும் இதுவாக உள்ளது. எனது விருப்பமும் அதுவே. இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் நிறைவடைந்து விட்டன. இன்னமும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவில்லை.

தீர்வை நாம் விரைந்து காண வேண்டும். தமிழ்க் கட்சிகளுடன் நான் ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வுக்கான பேச்சு வெற்றியடையும் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகளும் முழுமையான ஒத்துழைப்பை எனக்கு வழங்க வேண்டும். - என்றார். (02)



## டெங்கை கட்டுப்படுத்த ட்ரோன் பயன்பாட்டில்

கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் டெங்கு ஒழிப்புப் பணிகளில் ட்ரோன் கமெராக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

பொது சுகாதார பரிசோதகர்களால் செல்ல முடியாத உயரமான கட்டடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் ட்ரோன் கமெராக்கள் மூலம் இன்று பரிசோதிக்கப்பட்டன.

அத்தகைய கட்டடங்களில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்கள் மற்றும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களிற்கு ட்ரோனைப் பயன்படுத்தி இரசாயனத் துகள்களும் தூவப்பட்டன.

டெங்கு பரவும் வேகம் அதிகரித்திருப்பதை அடுத்து இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. டெங்குப் பரவல் குறையும்–வரை இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கென கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பகா ஆகிய இடங்களில் உள்ள ஒவ்வொரு வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் உரிய ஆளில்லா விமானத்தை நாளாந்தம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வருடத்தில் இதுவரை 35,419 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

## இந்த அரசிலிருந்து வெளியேறுவேன்

### மொட்டு எம்.பி. எச்சரிக்கை



சமுர்த்தி வேலைத் திட்டம் இல்லாதொழிக்கப்படுமானால் இந்த அரசில் இருந்து நிச்சயம் வெளியேறுவேன் – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறியவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே சமுர்த்தி வேலைத்திட்டம் உள்ளது. அதனை இல்லாது செய்வதற்கு இடமளிக்கப்படக்கூடாது. அதற்கு நான் எதிர்ப்பை வெளியிடுவேன்.

இது குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினேன். சமுர்த்தி வேலைத்திட்டம் இல்லாதொழிக்கப்படமாட்டாது, சமுர்த்தி அதிகாரிகளின் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படாது என ஜனாதிபதி உறுதியளித்தார்.

இந்த உறுதிமொழி மீறப்படுமானால் நான் அரசில் இருந்து நிச்சயம் வெளியேறுவேன்.

சமுர்த்தி வேலைத்திட்டத்தில் உள்ள குறைப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவேன் – என்றார். (02)

## இலங்கைக்குக் கடத்தப்பட இருந்த பெருமளவு கடலட்டைகள் சிக்கின

(ந.லோகதயாளன்)

இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கிவைக்கப்பட்டிருந்த 70 லட்சம் ரூபா (இந்திய நாணயம்) மதிப்பிலான 700 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டை தமிழ்நாடு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ராமேஸ்வரத்தை அடுத்த புலித்தேவன் நகர் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான குடிசை வீட்டில் இருந்து இவை கைப்பற்றப்பட்டன.

இலங்கைக்கு கடத்து–வதற்காக கடல் அட்டைகள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதாக கடலோரக் காவல் குழுமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இவை கைப்பற்றப்பட்டன.

சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளரைத் தீவிரமாக தேடி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டை 70 லட்சம் ரூபா இந்திய நாணத்தில் மதிப்பிலானவை எனவும் இதன் சர்வதேச மதிப்பு அதிகப்படியாக இருக்கும் என தமிழக பொலிஸார் தெரிவித்தனர்.

## 11 பாடங்களுக்கான விடைத்தாள்களின் திருத்தம் தொடங்கியது

2022 உயர்தரப் பரீட்சையின் 11 பாடங்களுக்கான விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் இன்று தொடங்கியுள்ளன. 32 நிலையங்களில் இந்தப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

இதுவரை 5 பாடங்களின் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் எஞ்சிய பாடங்களுக்கான விடைத்தாள்கள் திருத்தப்படுகின்றன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

திருத்தும் பணிகள் நிறைவடைந்த விடைத்தாள்களை பரீட்சைகள் திணைக்களத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

பொது ஆங்கிலம் பாடம் தொடர்பான விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி மே 26 முதல் 100 மையங்களில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

## மலையக மக்களுக்கு ஆதரவாக யாழ். நகரில் இன்று கவனவீர்ப்பு




மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் நிறைவையொட்டி யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று நடத்தப்பட்டது. மலையக மக்களுக்கு காணி வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தும் பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தார். யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்னால் அமைதியான முறையில் ஒரு கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று.

இந்தப் போராட்டத்தினை தேசிய கிறிஸ்தவ மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.


மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தி செய்த நிலையில், அவர்களுடைய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு அவர்கள் பல்வேறு துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர என்பதை நினைவு கூர்ந்து இந்த கவன ஈர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு கோரிக்கைகளை ஏந்திய பதாகைகளை தாங்கிய–வாறு போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டனர்.

மலையக மக்கள் சுதந்திரமாக வாழ காணி வழங்கு, மலையக மக்களை சிதைக்க வேண்டாம், பதவிகளுக்கு மலையக மக்களை விற்காதே , "மலையக மக்கள் சுதந்திரமாய் வாழ காணிக்கொடு "தோட்ட வைத்தியசாலைகள் அரசுடமையாக்கப்படவேண்டும், ''வியர்வை விதைத்த பூமி உழைப்பாளர்கள் உரிமையான பூமி, போன்ற கோரிக்கைகளை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் சர்வ மத தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர். (03)

## கொழும்பில் ஒருவர் சுட்டுப் படுகொலை!



கொழும்பு, பொரளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ரயில் கடவைக்கு அருகில் இன்று காலை ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரைப் பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் படுகாயங்களுடன் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், குறித்த நபர் சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர் 53 வய–துடையவர் எனவும், களனிப் பகுதியில் வசிப்பவர் எனவும் விசாரணையில் தெரிய–வந்துள்ளது. தப்பிச் சென்ற துப்பாக்கிதாரிகளைத் தேடும் பணியைப் பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர் . (02)

## அமைச்சுப் பதவி கிடைக்காமல் மொட்டுக் கட்சி அதிருப்தியா?

### இல்லை என்கின்றார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



அமைச்சுப் பதவி கிடைக்காததால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அதிருப்தியில் உள்ளனர் என வெளியாகும் தகவல்களை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நிராகரித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் 12 பேர் வரை அதிருப்தியில் உள்ளனர் எனவும், அவர்கள் எதிரணியில் அமரவுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே, அந்தத் தகவல் உண்மை அல்ல என ஜோன்ஸடன் பெர்ணான்டோ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ள போதிலும் மக்கள் நலன் கருதி அமைதி காப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (02)

## மட்டக்களப்பில் மாணவியுடன் விடுதியில் சிக்கிய ஆசிரியர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரபல பாடசாலையொன்றின் ஆசிரியர் ஒருவர், உயர்தர மாணவியை விடுதிக்கு அழைத்துச் சென்றபோது கைது செய்–யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு, ஓட்டமாவடியிலுள்ள பாட சாலையொன்றில் கடமையாற்றி வரும் ஆசிரியர் ஒருவர் தனியார் வகுப்புக்களையும் நடத்தி வந்துள்ளார்.

அவர் தனது தனியார் வகுப்பில் கற்று வந்த கிரான் பகுதியைச் சேர்ந்த 18 வயதான மாணவி ஒருவரை பாசிக்குடாவிலுள்ள விடுதியொன்றுக்கு அழைத்துச் சென்ற போதே கையும் மெய்யுமாகச் சிக்கியுள்ளார்.

இருவர் மீதும் சந்தேகமடைந்த ஓட்டோ சாரதிகள், விடுதி வரை பின் தொடர்ந்து சென்று, விடுதிக்குள் வைத்து ஆசிரியரையும், மாணவியையும் பிடித்தனர். அதன்பின்னர் குறித்த ஆசிரியரைக் கைது செய்த பொலிஸார், மாணவியை எச்சரித்துவிட்டு விடுவித்தனர். (02)

# தூதுவரை அழைத்து கனடாவுக்கு எதிர்ப்பு வெளியிட்டது இலங்கை

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை குறித்து கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த கருத்துக்களுக்கு இலங்கைக்கான கனடா தூதுவரிடம் வெளிவிவகார அமைச்சு கடும் ஆட்சேபஷ்னையை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக்வோல்சினை வெளிவிவகார அமைச்சிற்கு அழைத்து இலங்கை வெளிவிவகார அமைச்சு தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

நேற்று தூதுவரை அழைத்து எங்களின் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார். நாங்கள் 14 வருடங்களுக்குப் பின்னர் துன்பகரமான விதத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளை நினைகூறுகின்றோம் எனத் தெரிவித்துள்ள கனடா பிரதமர், முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலையில் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் இழக்கப்பட்டன. பலர் காணாமல்போனார்கள் காயமடைந்தார்கள் இடம்பெயர்ந்தார்கள் என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் மற்றும் அர்த்தமற்ற வன்முறையால் ஏற்பட்ட துயரத்துடன் தொடர்ந்தும் வாழும் அவர்களின் குடும்பத்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் பல சமூகங்களில் நான் சந்தித்த பலர் தமிழ் கனடா பிரஜைகளின் கதைகள் மனித உரிமைகள் சமாதானம் ஜனநாயகம் போன்றவற்றை இலகுவாகக் கருதமுடியாது என்பதை நினைவுபடுத்தி நிற்கின்றன எனவும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாகவே கடந்த வருடம் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவுதினமாக நாங்கள் அங்கீகரித்தோம் எனத்தெரிவித்துள்ள கனடா பிரதமர் மோதலால் கொல்லப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் உரிமைக்காகவும் இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளவர்களுக்காகக் குரல்கொடுப்பதை கனடா நிறுத்தாது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த அறிக்கையை கண்டித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இது இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகளுக்கு உதவியாக அமையாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (05)

# மூன்று பேருக்கு பேராசிரியர்களாக பதவி உயர்வு









யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகவும், ஒருவர் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பேராசிரியர் ஒருவர் துறைக்குரிய இருக்கைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகவும், விவசாய பீடத்தைச் சேர்ந்த ஒருவரை இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை இன்று ஒப்புதல் வழங்கியதுடன், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரைத் துறைக்கான இருக்கைப் பேராசிரியராக நியமிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்றுகாலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி (திருமதி) எஸ். எம். சி. மகேந்திரன் அலோசியஸ் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத்தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பூ. ஐங்கரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாயப் பொருளியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சூரியகுமார் விவசாயப் பொருளியலில் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதைப் பேரவை அங்கீகரித்தது.

இதேநேரம், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தில் மனித வள முகாமைத்துவத் துறையில் பேராசிரியரும் (Professor in Human Resource Management), மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவருமான பேராசிரியர் என் கெங்காதரன் மனித வள முகாமைத்துவத் துறைப் பேராசிரியராகப் (Professor of Human Resource Management) துறைக்கான இருக்கைப் பேராசிரியர் - Cadre Chair professor ) பதவி உயர்த்தப்படுவதற்கான தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்த பேரவை அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியது.

# காணாமல்போன மாணவி புத்தளத்தில் கண்டுபிடிப்பு!

மன்னார்-முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பண்டாரவெளி, மணற்குளம் என்ற முகவரியில் வசிக்கும் ரிகாா (வயது- 15) என்ற மாணவி காணாமல் போயுள்ள நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை புத்தளத்தில் கண்டு பிடிக்கப் பட்டுள்ளார் என மாணவியின் தந்தை தெரிவித்துள்ளார்.

மன்னார் - முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பண்டாரவெளி, மணற்குளம் என்ற முகவரியில் வசிக்கும் ரிகாா (வயது- 15) என்ற மாணவி வியாழக்கிழமை காலையிலிருந்து காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மாணவி பண்டாரவெளி முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்று வருகிறார் எனவுத் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மாணவி காணாமல் போனது தொடர்பாக பெற்றோர் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்நிலையில், குறித்த மாணவி நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை புத்தளத்தில் வைத்து கண்டு பிடிக்கப்பட்டுள்ள நிலையில், புத்தளம் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளார் என மாணவியின் தந்தை மேலும் தெரிவித்தார். (05)

# மாணவனை தாக்கி டிக்டொக்கில் காணொளி வெளியிட்டு சாகசம் காட்டிய மாணவர்கள் கைது

வவுனியாவில் பிரபல பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்கள் சிலர் இணைந்து சக மாணவனை வெள்ளிக்கிழமை வீதியில் வைத்து தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா பிரபல பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்குழு ஒன்று வவுனியா வைரவ புளியங்குளம் வீதியில் வைத்து ஒரு மாணவனை தலைக்கவசம், கொட்டன்தடி கொண்டு சரமாரியாக தாக்கி அதனை காணொளியாக பதிவு செய்து டிக்டொக்கில் சாகசம் காட்டி பதிவு செய்துள்ளனர்.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவன் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து குறித்த வன்முறை சம்பவத்துடன் தொடர்புடைய ஒரு மாணவனை பொலிஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளதுடன், மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய இன்னொரு மாணவனையும் இன்று கைது செய்து தடுப்புகாவலில் வைத்துள்ளார்கள்.

மேலும் இந்தச் சம்பவத்தின் முக்கிய ஆதரமான காணொளியை கொண்டு இதனுடன் தொடர்புடைய ஏனையவர்களை தேடும் பணியை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் ,விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (05)

# 300 இலங்கையருக்கு மகாத்மா காந்தி புலமைப்பரிசில்




இலங்கை முழுவதிலும் உள்ள 25 மாவட்டங்களைச் சேர்ந்த 300 உயர்தர மாணவர்களுக்கு மகாத்மா காந்தி புலமைப்பரிசில்கள் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோரால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் ஒரு மாணவருக்கு 2,500 ரூபா வழங்கப்படவுள்ளது. கொவிட் தொற்று காரணமாக இந்த ஆண்டு 2021-2022 என இரு தொகுதி மாணவர்களுக்கும் ஒரே சந்தர்ப்பத்தில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு இதன் போது வாழ்த்து தெரிவித்த உயர்ஸ்தானிகர், இருநாடுகளிலும் உள்ள இளைஞர்களின் பிரகாசமான எதிர்காலத்துக்காக கல்வித் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய கலாசாரத் தொடர்புகளை எடுத்துக்காட்டிய அவர் , இந்தியாவில் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

எதிர்காலத்தில் இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கும் இலங்கையின் இளம் தலைமுறையினர் பெரும் பலமாக இருப்பார்கள் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, மகாத்மா காந்தி புலமைப்பரிசில் மட்டுமல்லாமல், மேலும் பல புகழ்பெற்ற நிறுவனங்களில் பல்வேறு உதவித்தொகைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்கியதற்காக இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த முயற்சிகள் இலங்கையின் மனித வள வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன எனவும் , மாணவர்களுக்கான பாடப் புத்தகம் அச்சிடுவதற்கான ஆதரவை வழங்கியதற்காக இந்திய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (05)







# மின்கலத்தில் இயங்கும் படகு இயந்திரங்களை பார்வையிட்டார் கடற்றொழில் அமைச்சர்

மில்ரன் மோட்டர்ஸ் எனப்படும் தனியார் தொழில் முயற்சியாளர்களால் வடிவமைக்கப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட மின்கலத்தில் இயங்கும் படகு இயந்திரங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (வெள்ளிக்கிழமை) பார்வையிட்டார்.

அந்த இயந்திரங்களை பாணந்துறை பகுதியில் பரீட்சித்துப் பார்த்த கடற்றொழில் அமைச்சர் வழங்கிய ஆலோசனைக்கு அமைய மேம்படுத்தப்பட்டுள்ள படகு இயந்திரங்களை அமைச்சர் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)





காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சட்டவிரோத மணல் அகழ்வால் அழிந்துவரும் பிரதேச வளங்கள்

## சுண்டிக்குளம் மக்கள் வேதனை







கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் கல்லாற்றுப் பகுதியில் உள்ள பல ஏக்கர் வனப்பகுதியும், சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயமும் (தேசிய பூங்கா) சட்ட விரோத மணல் அகழ்வு காரணமாக அழிக்கப்பட்டு வருகிறது. இதனால் தமது பிரதேசம் வளம் குன்றி காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில் –

பறவைகள் சரணாலய பகுதியில் உள்ள கண்டல் காடுகள் அழிக்கப்பட்டு, அங்கே மணல் அகழ்வு வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

கடலின் நீர்மட்டத்தை விடவும் அதிக ஆழத்தில் குழிகள் தோண்டப்படுவதால் சுண்டிக்குளம் கடல் நீர் குடியிருப்புக்குள் புகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னரைவிடதற்போது மணல் அகழ்வு வேலைகள் இரவு பகலாக நடைபெறுகின்றன.

இதன்போது உழவு இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனங்கள் எந்நேரமும் இயங்கிக்கொண்டே இருக்கின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்களால் கல்லாற்றுப் பகுதியில் இருந்து சுண்டிக்குளம் வரையுள்ள பாதையில் பயணிக்க முடியாத அளவுக்கு அந்த வீதி குன்றுங்குழியுமாக காணப்படுகிறது.

இவ்வாறு அந்த வீதி சீரற்று இருப்பதால், அம்புலன்ஸ்கள் கூட செல்ல முடியாமல் அவசர மருத்துவ தேவையுடையோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மணல் அகழ்வின் மூலம் எமக்கு ஏற்பட்டிருக்கும் இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அரசியல்வாதிகளோ அல்லது பொலிஸாரோ அல்லது கனியவள பிரிவினரோ அல்லது ஏனைய எந்தவொரு அரச அதிகாரிகளோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேலும் தொடருமேயானால், இங்கிருந்து நாங்கள் வெளியேறவேண்டிய நிலைமையே ஏற்படும் என அச்சத்தோடு தெரிவிக்கின்றனர். (05)

# சுதந்திரம்பெற்ற போதிலும் அதன் உரிமைகளை அனுபவிக்க முடியாமல் தற்போதும் வாழ்கிறோம்!

## வே.இராதாகிருஷ்ணன் ஆதங்கம்

இலங்கை கடந்த 1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றபோதிலும் அந்த சுதந்திரம் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமைகளை நாம் அனுபவிக்க முடியாமல் இன்றும் இந்த நாட்டில் இருக்கின்றோம். இந்த நாடு சுதந்திரம் பெற முன்னரும் சுதந்திரம் கிடைத்த பின்பும் எமது மக்கள் அடிமைகளாகவே வாழ்கின்றார்கள் என்பதுதான் உண்மை என மலையக மக்கள் முன்னனியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் நுவரெலியா புதியநகர மண்டபத்தில் நடைபெற்ற ' மலையகம் 200 ' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பொழுது கூறினார்.



அங்கு இராதாகிருஷ்ணன் தொடர்ந்து உரையாற்றுகையில் –

தென்னிந்தியாவிலிருந்து இலங்கை நாட்டுக்கு நாட்கூலிகளாகவும் அடிமைகளாகவும் அழைத்துவரப்பட்ட எமது மூதாதையர்ககள் கடந்த 200 வருடங்களாக அவர்கள் அனுபவித்த துன்பதுயரங்களின் வரலாற்றின் கண்ணோட்டத்தை தெளிவுபடுத்தும் நிகழ்வை முத்துலிங்கம் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். அவரை நான் பாராட்டுகின்றேன்.

எமது சமூகத்துக்கு இந்த நாட்டில் என்ன நடந்தது என்று கடந்த 60, 70 வருடங்கள்தான் எங்களுக்கு தெரியும். அந்த கையில் கடந்த 1948 ஆண்டு இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தாலும் இந்த சுதந்திரத்தை மலையக மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சுதந்திரமாக இருக்கின்றது.

ஏன்னென்றால் 1947 ஆம் ஆண்டு இந்தியாவிற்கும் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்திற்கு முன்பும் சுதந்திரத்திற்கு பின்பும் எமது சமுதாயம் அடிமைகளாக தான் இருக்கின்றோம். என்றுதான் கூறவேண்டும்.

1948 ஆம் ஆண்டிற்கு பின் இந்த நாடில்வாழும் ஏனையோருக்கு பிரஜாவுரிமை வாக்குரிமை உரிமை, சுய மரியாதை இருந்தது. ஆனால் மலையக மக்களுக்கு பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது.

நாடற்றவர்களாக நாங்களும் வாழ்ந்திருகின்றோம். அதற்கு பின் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் படிப்படியாக மாற்றமடைந்து எமது மக்களுக்கு பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டது.

நேரு–கொத்தலாவலஓர் ஒப்பந்தம் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அதில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் மிகவும் மோசமான ஒப்பந்தம் 6 பேர் இந்தியா சென்றால் 4 பேர் இங்கு இருக்கலாம். என்ற ஒப்பந்தத்தால் 10 லட்சம் மக்ககளில் 6 லட்சம் மக்கள் இந்தியாவிற்கு சென்று விட்டார்கள்.

மிகுதியாக இருந்த 4 லட்சம் மக்களுக்கு அரசாங்கத்தின் தேவைக்காக படிப்படியாக பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டது. சான்றிதழ்கள் மூலமும் சான்றிதழ்கள் இல்லாமல் சத்தியக்கடதாசி மூலமும் வாக்களிக்கத் தகுதி பெற்றார்கள். இவர்களின் வாக்குகள் மூலமே பல கட்சிகள் ஆட்சி அமைத்து வந்துள்ளன. ஆனாலும் ஒரு சில தனி வீடுகள் கட்டடப்பட்ட போதிலும் இன்னும் தொழிலாளர்கள் லைன் அறைகளிலேயே அதிமானவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

கல்வி அறிவு இல்லாமல் இருந்தது. தற்பொழுது கல்வி அறிவுள்ள சமூகமாக மாற்றமடைந்து வருகின்றது. சுகாதார துறையிலும் சற்று மாறி வருகின்றது. அதேபோல சமூகமும் சற்று மாறிவருகின்றது. அண்மைக்காலங்களாக தமிழ் முற்போக்கு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

எதிர்காலத்திலும் இந்த மக்களின் அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டியிருப்பதால் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என அவர் கூறினார். (05)

# இலங்கை இந்திய கூட்டுத்திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம்!

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி, சம்பூர் மின் உற்பத்தி நிலையம் உள்ளிட்ட வேலைத்திட்டங்களை இந்தியாவின் 100 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் முன்னெடுப்பது தொடர்பான மீளாய்வு கூட்டம் இடம்பெற்றுள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கும், கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்திய அரசாங்கத்தின் உதவி மற்றும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்களில் மீள்புதுப்பிக்கத்தக்க உட்கட்டமைப்பு மற்றும் விநியோகம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உமா ஓயா அனல்மின் நிலையத்தின் முதல் பாகத்தின் நிர்மாணப் பணிகள் ஓகஸ்ட் மாதத்திலும், இரண்டாம் பாகம் செப்ரெம்பர் மாதத்திலும் நிறைவடையும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

உமா ஓயா பல்நோக்கு திட்டத்தின் நிர்மாண நிறுவனமான 'ஃபராப்' நிறுவனத்துக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டதாகவும், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் தேசிய மின்சார அமைப்பில் 120 மெகாவோட் சேர்க்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உமா ஓயா பல்நோக்கு திட்ட நிர்மாண நிறுவனமான 'ஃபராப்' நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி அலி வக்கிலி, உமா ஓயா திட்ட முகாமையாளர் மற்றும் நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோருக்கு இடையில் இது குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. (05)




# தேசிய பாதுகாப்பு உச்சி மாநாடு ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

இலங்கை தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய பாதுகாப்பு உச்சி மாநாடு பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முதுகலை பீட கேட்போர் கூடத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் முன்னேற்றத்துக்கான ஆராய்ச்சி மற்றும் அது தொடர்பான ஆய்வுகளை ஊக்குவிக்கும் இந்த மகத்தான முயற்சியை நிகழ்வில் உரையாற்றும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டியுள்ளார்.

வளமான, பாதுகாப்பான மற்றும் ஸ்திரமான இலங்கைக்கு ஊழலை ஒழித்தல், ஊழலை ஒழிக்க நிர்வாக மற்றும் பொதுச் சேவை பொறிமுறைகளில் மாற்றங்களைச் செய்தல், சுயாதீனமான மற்றும் திறமையான சட்டத்தை அமுல்படுத்த வலுவான , பலதரப்பட்ட சட்ட அமைப்பு தேவை, ஆட்சியைப் பேணுதல், சட்டம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான பலமானதும் பயனுள்ளதுமான நிர்வாகம், காலநிலை இணையப் பாதுகாப்பு, பாதுகாப்பு பரிமாணங்களை மாற்றுதல், காலநிலை மாற்றம், இந்த நெருக்கடியான தசாப்தத்தில் உடனடி உலகளாவிய நடவடிக்கைகள், சைபர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான விரைவான பதில்கள் உட்பட பல தலைப்புகள் தொடர்பில் இந்த அமர்வில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படைகளின் பிரதானிகள், தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் 10 சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அநீதி

## பொறுமையுடன் இருக்கின்றோம் என்கிறார் சந்திரசேன

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பத்து சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை பலவீனப்படுத்தக்கூடாது என்பதற்காக பொறுமையுடன் இருக்கின்றோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.



அநுராதபுரம் பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதாரப் பாதிப்புக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவுசெய்தோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த ஒருசில தவறான தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஜனாதிபதியை நாங்கள் தெரிவுசெய்திருந்தாலும், பொதுஜன பெரமுனவை முழுமைப்படுத்திய வகையில் அமைச்சரவை ஸ்தாபிக்கப்படவில்லை.

அமைச்சரவை விவகாரத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பத்து சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை பலவீனப்படுத்தக் கூடாது என்பதற்காக பொறுமையுடன் செயற்படுகிறோம். 69 லட்சம் மக்களின் தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிப்பதற்கும், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கும் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் முக்கிய பங்கு வகித்தார்கள். ஆனால், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை.

தேசிய வளங்களை தனியார்மயப்படுத்தும் கொள்கை பொதுஜன பெரமுனவுக்கு கிடையாது. இருப்பினும், தற்போதைய நிலையில் பொதுஜன பெரமுனவின் அடிப்படை கொள்கைகள் செயற்படுத்தப்படுவதில்லை என்பது பல விடயங்கள் ஊடாகத் தெளிவாக விளங்குகிறது. – என்றார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## அயலுறவுத்துறை அமைச்சர் கூறும் நல்லிணக்கத்தின் அர்த்தம் என்ன?

**கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் தொடர்பில் தெரிவித்திருக்கும் கருத்துக்கு இலங்கை தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. கனடா நாட்டுத் தூதுவரை நேரில் அழைத்து இலங்கையின் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி. கனடாவின் நிலைப்பாடு நாட்டில் நல்லிணக்கத்திற்கு உதவாது என்றும் தெரிவித்திருக்கிறார்.**

**அப்படி என்னதான் ட்ரூடோ சொல்லிவிட்டார்? இலங்கையில் தொடர்ந்து கஷ்டங்களை எதிர்நோக்கும் அனைவரது உரிமைகளுக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தாது என்று தெரிவித்திருக்கிறார். முள்ளிவாய்க்கால் படுகொலையின் 14ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி அவர் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இலங்கையில் 14 ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த ஆயுதப் போரின் போது ஏற்பட்ட துயரமான உயிர் இழப்புகளை நாங்கள் சிந்திக்கின்றோம். முள்ளிவாய்க்கால் படுகொலை உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் உயிர்களை இழந்தார்கள். மேலும் பலர் காணாமல்போனார்கள், காயமடைந்தார்கள் அல்லது இடம்பெயர்ந்தார்கள். நமது எண்ணங்கள் பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்கள், இந்த அர்த்தமற்ற வன்முறையால் ஏற்படும் வலியுடன் தொடர்ந்து வாழ்கின்றார்கள்.**

**இதன் காரணமாகவே கடந்த ஆண்டு கனேடிய நாடாளுமன்றம் மே 18 தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாகப் பிரகடனப்படுத்தும் பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. மதம், நம்பிக்கை மற்றும் பன்மைத்துவ சுதந்திரத்துக்கு அழைப்பு விடுக்கும் தீர்மானங்களை இலங்கை ஏற்றுக்கொள்வது என்பது எதிர்வரும் ஆண்டுகளில், அந்த நாட்டில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதற்கான அத்தியாவசிய கூறுகளாகும்.**

**இந்த நிலையில் உலகெங்கிலும் உள்ள மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பணியைத் தொடருவோம். மனித உரிமை மீறல்களுக்குப் பதிலளிக்கும் வகையில், நான்கு இலங்கை அரச அதிகாரிகளுக்கு எதிராக தமது அரசு தடைகளை விதித்தது. இதேவேளை, கனடா அரசின் சார்பாக, தமிழ் கனேடியர்கள், நாட்டுக்கு ஆற்றிய பல பங்களிப்புக்களை அங்கீகரிக்க அனைத்து கனேடியர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்" – என்று தெரிவித்திருந்தார் கனேடியப் பிரதமர்.**

**அவர் சொன்னதில் என்ன தவறு இருக்கின்றது? கடந்த 14 ஆண்டுகளாக இதையேதான் தமிழர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஐ.நாவிலும் உலக நாடுகள் எல்லாவற்றிலும் ஏறி ஏறிச் சொல்கிறார்கள். அதையேதான் கனேடியப் பிரதமரும் சொல்லியிருக்கிறார். இலங்கை ஆட்சியாளர்கள் என்னதான் மறைத்தாலும் காலங் கடந்தாயினும் உலகம் அந்த உண்மையை உணர்ந்துதான் ஆகும்.**

**இதில் இலங்கையின் நல்லிணக்கத்திற்கு கனேடியப் பிரதமரின் அறிக்கை எந்த வகையில் குந்தகம் விளைவிக்கிறது என்பதுதான் புரியவில்லை? தமிழர்களும் உலகமும் நீதியைக் கேட்பது எப்படி அயலலுறவுத்துறை அமைச்சருக்கு நல்லிணக்கத்திற்கு உதவாமல் போகும் என்பதும் தெரியவில்லை. அயலுறவுத்துறை அமைச்சர் கருதும் நல்லிணக்கம் என்பது, அனைத்துக் கொடுமைகளையும் மறந்த அடிமைத்தனமா என்ன?**

# பின் கதவு ஊடாக வழங்கப்படுகின்ற அரசியல் நியமனங்கள் சட்ட முரண்

## லக்ஷ்மன் கிரியெல்ல காட்டம்



கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களுக்கு நியமித்து அவர்களுக்கான சிறப்புரிமைகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. பின் கதவின் ஊடாக வழங்கப்படும் இவ்வாறான அரசியல் நியமனங்கள் சட்டத்துக்கு முரணானவையாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தற்போது உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலம் நிறைவடைந்து அவை கலைக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றின் தலைவர்களாகவும் , உறுப்பினர்களாகவும் செயற்பட்டவர்களுக்கு சிறப்புரிமைகளை வழங்குவதற்காக பொது நிர்வாக அமைச்சால் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் நியமிக்கவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவினரே இவ்வாறான நியமனங்களைப் பெறவுள்ளனர். இவர்களுக்கு சிறப்புரிமைகளையும் , சலுகைகளையும் வழங்குவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட திட்டமிடலாக திட்டமிட்டு தேர்தலைக் காலம் தாழ்த்தியுள்ள அரசாங்கம் , இவ்வாறானதொரு தீர்மானத்தை எடுத்துள்ளமை சட்ட விரோதமானதாகும். பின்கதவின் ஊடாக வழங்கப்படவுள்ள இந்த தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவையல்ல. – என்றார். (05)

# டுபாயிலிருந்து இரண்டு கிலோ தங்கத்தை நாட்டுக்குள் கடத்தும் முயற்சி முறியடிப்பு

டுபாயிலிருந்து சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான 2 கிலோ கிராம் தங்கத்தை நாட்டுக்குள் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது மூன்று பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், தங்கத்தை கைப்பற்றியதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விமான நிலைய சுங்கப் பிரிவினர் அந்தத் தங்கத்தை பறிமுதல் செய்ததுடன், 12 இலட்சம் ரூபா அபராதம் விதித்து குறித்த நபரை விடுவித்ததாக சுங்கப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (05)

# இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள்!

## பாதிக்கப்பட்ட தரப்பினர் பிரித்தானிய பிரதமரிடம் கடிதம் மூலம் வலியுறுத்தல்


இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்ட தரப்பினர் இனப்படுகொலையைத் தடுத்தல் மற்றும் வழக்குத் தொடரலுக்கான சர்வதேச நிலையத்தின் பிரதிநிதிகளுடன் இணைந்து பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனாக்கிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள், பிரிட்டனிலும் வெளிநாடுகளிலும் வாழும் பாதிக்கப்பட்ட தரப்பினர், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர், இனப்படுகொலையைத் தடுத்தல் மற்றும் வழக்குத் தொடரலுக்கான சர்வதேச நிலையத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென வலியுறுத்தி அந்நாட்டுப் பிரதமர் ரிஷி சுனாக்கிடம் கடிதமொன்றைக் கையளித்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை உள்ளடக்கி 900 இற்கும் மேற்பட்டோரால் கையெழுத்திடப்பட்ட மனுவையும் அவர்கள் அந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளனர். அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு 14 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை நினைவுகூருகின்றோம். இருப்பினும் இன்னமும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்படவில்லை.

இலங்கையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதை முன்னிறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இணையனுசரணை வழங்கியதன் மூலம் தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரிட்டன் மேற்கொண்ட முயற்சிகளைப்



பாராட்டுகின்றோம்.

அதேபோன்று தற்போது இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டுவருகின்றது என்பதை பிரிட்டன் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென பிரிட்டன் நாடாளுமன்ற உறுப் பினர்கள் வலியுறுத்தி வருவதையும் வரவேற்கின்றோம்.

இலங்கையில் தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதையும், மேமாதம் 18 ஆம் திகதியை தமிழினப்படுகொலை நினைவு நாளாகப் பிரகடனப்படுத்துவதையும் முன்னிறுத்தி கடந்த ஆண்டு மேமாதம் 18 ஆம் திகதி கனேடிய நாடாளுமன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமையை உலகளாவிய ரீதியில் வாழும் தமிழ்மக்களும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மாரும் பெரிதும் பாராட்டினர். நீதி நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையை அந்தத் தீர்மானம் வழங்கியது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளுமாறு உங்களிடமும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் வலியுறுத்துகின்றோம். தேவையேற்படும் பட்சத்தில் இவ்விவகாரம் தொடர்பில் பிரிட்டன் தனியாகவோ அல்லது ஏனைய நாடுகளுடன் இணைந்தோ தீர்ப்பாயமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச, மஹிந்த ராஜபக்ச மற்றும் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருக்கு எதிராக உடனடியாகப் பயணத்தடை விதிக்கப்பட வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# மலையகத்தில் பிறந்த எல்லோரும் முயற்சியால் மேலோங்கவேண்டும்

## பழனி திகாம்பரம் கோரிக்கை

மலையகத்தில் பிறந்த எல்லோரும் தமது முயற்சியால் மேலோங்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்க தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

நுவரெலியாவில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் ஏற்பாடு செய்திருந்த ' மலையகம் 200' வரலாற்று நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு –

'மலையகம் 200' வருட நிகழ்வை கொண்டாடும் அளவிற்கு மலையக மக்கள் முன்னேற்றமடைந்து விட்டனர் எனச் சொல்கிறார்கள் அதற்கு மலையகத்தை ஆண்டவர்கள் தான் பொறுப்பு கூற வேண்டியவர்கள் எனக்கு இந்த நிகழ்வு புதியதல்ல. நான் மலையகத்தில் பிறந்து அந்த மக்களுடன் வாழ்ந்து அந்த மக்களுடைய கஸ்டங்களை தெரிந்து கொண்டவன். என்னுடைய அப்பா அம்மா தோட்டத்தில் தொழிலாற்றியவர்கள் சாதாரண வாழ்விலிருந்து நான் என்னை வளர்த்துக் கொண்டு பாராளுமன்றம் சென்று மக்களுக்கு சேவையாற்றி வருகின்றேன்.

அரசியல்வாதிகள் அதை செய்வார்கள். இதை செய்வார்கள் என்று எதிர்பார்த்தால் ஒன்றும் நடக்காது எனவே மலையகத்தில் பிறந்த எல்லோரும் தமது முயற்சியால் மேலோங்க வேண்டும். ஆகவே, இந்த நிகழ்வு மலையக மக்களுக்கும் சரி, அரசாங்கத்திற்கும் சரி, இந்திய அரசாங்கத்திற்கும் சரி ஓர் எடுத்து காட்டு நிகழ்வாகும்.

நமது வாழ்வியல் நிலைமை இலங்கை அரசாங்கத்துக்கும், இந்திய அரசாங்கத்திற்கும் ஏனையவர்களுக்கும் நன்கு தெரியும் . ஆனால் நமக்காக யாரும் அள்ளிக் கொடுப்பதாக இல்லை மாறாக கிள்ளி கொடுப்பவர்களாகவே இருக்கின்றார்கள்.

உதாரணமாக நான் மலையகத்திலிருந்து அரசியல் வாழ்க்கை ஆரம்பித்து 20 வருடகாலமாகும் 2015 ஆம் ஆண்டு எதிர்க்கட்சியில் தான் இருந்தேன். ஆனால் 2015 ஆம் ஆண்டு சரியான சந்தர்ப்பம் கிடைத்தது அந்த சந்தர்ப்பத்தில் மலையக பிரச்சினைகளை இந்திய ,இலங்கை அரசுகளுக்குத் தெரிவித்தோம்.

இதன் மூலம் மலையக மக்களுக்கு ஏழு பேர்ச் காணியை பெற்றுக் கொடுத்தோம். வங்கியில் வைத்து கடன் பெற்று கொள்ளும் தரமான காணி உறுதி பத்திரம் பெற்றுக் கொடுத்தோம் இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இதற்கு சிலர் போட்டி போட்டார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதேச சபைகளின் சட்டங்களை மாற்றி எங்கள் கூட்டணி பிரதேச சபைகளை அதிகரித்து கொடுத்துள்ளோம்,

மலையகமெங்கும் ஓரளவு தனி வீடுகளை அமைத்து கொடுத்துள்ளோம். யாரும் எம் மீது குறைகூற முடியாது. நாம் மலையகத்துக்காக முன்மாதிரியான சேவைகளுக்கு எதிராக அநாகரீக முறையில் விமிகள் குறுந்தகவல்கள் அனுப்பி உள்ளனர். அதேநேரத்தில் அப்போது மலையக மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க உலக வங்கியுடன் கதைத்து அதற்கான பணியை செய்துள்ளேன். எதிர்காலத்தில் ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவார். அவரின் அரசாங்கத்தில் நல்லாட்சியில் நாம் முன்னெடுத்த அபிவிருத்தி பணிகளை செய்யமுடியும். அத்துடன் மலையக தோட்டத் தொழிலாளர்களை கூலி தொழிலாளர்களாக அல்லாது சிறு தோட்ட முதலாளிகளாக மாற்றியமைக்கும் பணிக்கான கனவை மனோ, திகா, இராதா ஆகியோர் ஒற்றுமையாக இருந்து நனவாக்கி காட்டுவோம் எனத் தெரிவித்தார். (05)